கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

16-2-1975

50 காசு




வாழ்க்கையில் சுயமாக வளம் பெறும் ஆடவர் ஒருவர்...
...அதற்குத் துணை செய்ய அழகான ஆடைகளையும் அணிகிறார் !
MAFATLAL GROUP
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !
AIYARS-M.461 TM

கோகுலம்

மலர் 3 □ இதழ் 23

பிப்ரவரி 16, 1975

ஆனந்த, மாசி 4

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
-- பாரதியார்

சந்தா விவரம்:

உள்நாடு:

ஒரு வருடம் ரூ. 13-00


ஆறு மாதம் ரூ. 6-50


வெளிநாடுகள்:

ஆண்டுச் சந்தா ரூ. 25-00

தபாலாபீஸ் கோபுரம்

இங்கிலாந்திலேயே — மிக உயரமானதொரு கட்டடம் லண்டனில் உள்ள தபாலாபீஸ் கோபுரம்தான். நவீனக் கட்டடக் கலையின் அதிசயமாக விளங்குகிறது 580 அடி உயரமான இந்தக் கோபுரம். டோட்டன் ஹாம் கோர்ட் சாலைக்கு அருகே நிறுவப்பட்டுள்ள இந்தக் கோபுரத்தின் உச்சியிலிருந்து இங்கிலாந்து முழுவதற்குமான டெலிவிஷன் மற்றும் டெலிபோன் தொடர்புகளுக்கான ரேடியோ நுண்ணலைகள் அனுப்பப்படுகின்றன. 1,50,000 டெலிஃபோன் சர்க்யூட்டுக்களையும் நாற்பது டெலிவிஷன் சானல் (chanel) களையும் கொண்டது இந்தக் கோபுரம். தூண் போன்ற இந்தக் கோபுரத்தின் விசேஷம் இதன் ஒரு பகுதி சுழலக் கூடியது. இருபது நிமிஷங்களுக்கு ஒரு சுற்று. இப்படிச் சுழலும் இந்தப் பகுதியில் உணவு விடுதி அமைக்கப்பட்டிருக்கிறது. (D) கீழ்ப் பகுதியில் (H) வெண்டிலேட்டிங் (காற்று வசதிக்கான) அமைப்புக்களும், நடுப் பகுதியில் (G) — இதுவே பிரதான பாகம் — டிரான்ஸ்மிடிங் கருவிகளும் இதற்கு மேலே (F) ஏரியல் காலரிகளும் உள்ளன. இந்தக் கோபுரத்தின் மீது ஏறிச் சென்று லண்டன் அழகைப் பார்த்து மகிழலாம். இதற்கேற்ற வகையில் வசதியுடைய பகுதி (E) உணவு விடுதிக்குக் கீழே உள்ளது. உணவு விடுதியின் சமையல் அறை ஒரு தனிப் பகுதி (C) இத்தனை உயரமான கோபுரத்தின் மீது ஏறி இறங்க லிஃப்ட் இல்லாமல் இருக்குமா? இந்த லிஃப்டுகளை இயக்கும் மோட்டார் உள்ள பகுதி (B), மின் அலைகளை விண்வெளியில் செலுத்தும் கம்பங்கள் நிறுவிய உச்சிப் பகுதிக்குக் (A) கீழே உள்ளது. பொதுமக்கள் இந்தக் கோபுரத்தின் மீது ஏறிப் பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். சுழலும் உணவு விடுதி அவர்களுக்காகத்தானே! இந்தக் கோபுரத்தைக் கட்டுவதற்கான செலவு என்ன தெரியுமா? இரண்டு மிலியன் பவுன்கள். நம் தமிழ் நாட்டில் சென்னையில்கூட இம்மாதிரி சுழலும் உணவு விடுதியோடுகூடிய உயரமான கோபுரம் ஒன்று கட்டுவதற்கான திட்டம் ஒன்று உள்ளது.





அலை அழகி கேலா

'வாண்டுமாமா'

ஹவாய் பல தீவுக் கூட்டங்களால் ஆனது. ஒவ்வொரு தீவுக்கும் ஒரு தலைவன் உண்டு. 'மாய்' என்று ஒரு தீவு. அதன் அரசன் 'காவோ'. இவனுக்கு ஒரு தங்கை. இவள் பெயர் 'கேலா'. சிரிக்கும் நீலக் கடலின் நடுவே பதித்த மரகதக் கற்களைப் போல்



மாய்த் தீவும் அதன் தோழமைத் தீவுகளும் பளிங்கீபிக் கடலிலே காட்சி அளித்தன. கேலா தன் தாய் நாட்டை, அதில் உள்ள நெடிதுயர்ந்த மலைகளை, பசுமை சூழ்ந்த பள்ளத்தாக்குகளை, கடற்கரைச் சமவெளிகளை உளமாற நேசித்தாள்.

ஆனால் இவைகளுக்கெல்லாம் மேலாக இந்த ஹவாய் இளவரசியின் இதயத்தைக் கவர்ந்தது கடற்கரையை நோக்கிக் குதி போட்டு ஓடி வந்து மோதும் அலைகள்தான். சூரிய ஒளியில் நீலமாகத் தகதகக்கும் கடல் நீர், அலைகளாக மாறிக் கரையில் வந்து மோதும்போது எப்படிப் பால் வெள்ளையாகக் காட்சி அளிக்கிறது என்று வியந்து மகிழ்ந்து போவாள் கேலா.

''கடலிலே பிறக்க வேண்டியவள் என் தங்கை கேலா'' என்பார், அவள் சகோதரரான அரசர் காவோ. ''சின்னக் குழந்தையாக இருக்கும் போது அவளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விளையாட்டு கடல் நீரில் அளைந்து துளைந்து ஊட்டி அடிப்பதுதான்.''

அந்தக் காலத்தில் இந்தத் தீவுக் குழந்தைகள் ஆணானாலும் பெண்ணானாலும் நடப்பதற்கும் முன்னால் கடல் நீரில் நீந்துவதற்குத் தான் கற்றுக் கொள்ளுவார்கள். அவர்களுடைய விளையாட்டெல்லாம் கடற்கரையை ஒட்டிய ஆழம் இல்லாத கடற்பகுதிகளில் தான் இருக்கும். அலை கடலின் வெண் நுரைகளுக்குப் பின்னே ஒளிந்து பிடித்து விளையாடுவார்கள். அலைகளுக்கு நடுவே நின்று கொண்டு பலப் பரீட்சை செய்து மகிழ்வார்கள்.

ரொட்டிப் பழ மரம் என்று ஒரு வகை மரம். அதிலிருந்து நீண்ட சறுக்குப் பலகைகளைத் தயார் செய்து அதன் மீது நின்று கொண்டு சுருண்டு வரும் அலைகளின் மீதாக அதன் வேகத்தோடு போட்டியிட்டபடி நீரைக் கிழித்துக் கொண்டு மிதந்து வருவது சாகஸமான ஒரு விளையாட்டு. ஹவாய் வாலிபர்களும் குமரிகளும் இதில் வல்லவர்களாக இருப்பார்கள். இதற்கு, 'ஸர்ஃப் போர்டு' என்று பெயர். நல்ல அகலமானது. உயர்ந்த மனிதன் தாராளமாகப் படுத்துக் கொள்ளும் அளவுக்கு நீளமானது. குழந்தைகளுக்கு ஏற்ற சிறிய சர்ஃப் போர்டுகளைத் தகப்பன்மார்கள் தயாரித்துத் தருவார்கள். இந்தப் பலகைகளின் ஓரங்கள் சற்றே வளைந்திருக்கும். இரு முனைகளும் வழித்து விடப்பட்டதுபோல்

அரை வட்ட வடிவமாக, நீரைக் கிழித்துக் கொண்டு முன்னேற வசதியாக இருக்கும். அலைகளின் மீது சறுக்குப் பலகைகளில் வழுக்கியபடி போவது ஓர் அற்புதமான அனுபவம்.

எந்தப் பையனும், பெண்ணும் கேலாவைப் போல் நீந்த முடியாது. அமைதியும் ஆழமும் மிக்க கடற்கரையின் அடி வரை மூழ்கவோ, அதன் தரையிலிருந்து பளபளக்கும் பவழங்களைக் கொண்டு வரவோ முடியாது. சறுக்குப் பலகையில் சவாரி செய்வதிலும் வல்லவள் கேலா. அலைகளின் மீதாகக் கொஞ்சமும் நிதானம் இழக்காமல் கடலுக்குள் வெகு தூரம் வரை அந்தப் பலகையின் மீது பயணம் செய்வாள். இதனால் அவளை 'அலை அழகி கேலா' என்றே எல்லோரும் அழைக்கலானார்கள். அலைகளின் மீதாகக் கேலா மிதக்கும் அழகைக் கரையில் நின்றபடி எல்லாரும் கண்டு வியப்பார்கள். ''ரொம்பத் துணிச்சல்காரிதான். அலைகள் எப்படிச் சுருண்டு புரண்டு எழும்பி ஆர்ப்பரிக்கின்றன? ஆனால் கேலா கொஞ்சமும் பயப்படவில்லையே! ஒரு நாள் இவள் கடலில் முழுகத்தான் போகிறாள்'' என்றெல்லாம் பேசிக் கொள்ளுவார்கள்.


நாட்கள் நகர்ந்தன. இளவரசி கேலா வளர்ந்து வனப்பு மிக்க மங்கையானாள். திருமணம் செய்ய வேண்டிய பருவம் வந்தது. பல வாலிபர்கள் அவள் வாழ்க்கையை வளமாக்க முன் வந்தார்கள். ஆனால் கேலா தன்னை மணக்க விரும்பும் வாலிபன் 'எப்படி இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தாள். ''என்னைவிடத் திறமையாக அலைகளின் மீது யார் பவனி வருகிறார்களோ, அவரையே நான் மணந்து கொள்ளுவேன்'' என்றாள்.

தன்னை மணக்க விரும்பி வரும் இளைஞனைக் கடற்கரைக்கு அழைத்துப் போவாள்; போட்டிக்கு அழைப்பாள். சறுக்குப் பலகை மீதாக அலைகளைக் கிழித்துக் கொண்டு அவள் செல்லும் அழகு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அவளது சுருங் குழல் பின்னால் அலையாகப் புரண்டு விழும். கண்கள் கருநீலமாக மின்னும். 'ஸர்ஃப்' என்ற அந்தப் பலகையில் அலை மீது மிதந்து வருபவர்கள் அதன் மீது குப்புறப் படுத்துக் கொள்ளுவார்கள். கொஞ்சம் திறமைசாலிகள் ஒரு காலை மடக்கி மண்டியிட்டு அதில் அமர்ந்தபடி வருவார்கள். வெகு சிலரால்தான் அந்தப் பலகையின் மீது நின்றபடி கம்பீரமாக வர முடியும். அதற்கு மிகுந்த துணிவும் திறமையும் வேண்டும். கேலா நின்றபடிதான் வருவாள். கேலாவிடம் இத்தகைய போட்டியில் தோல்வி கண்ட இளைஞர்கள், ''இவளுக்கு வேண்டியது ஸர்ஃப் பலகைதான், ஆண் மகனல்ல'' என்று கூறிவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினார்கள். கடல் மகளான கேலாவுக்கு இணையாக அலைகளின் மீது சறுக்குப் பலகையில் வரும் போட்டியில் வெற்றி பெற்று வர யாராலுமே முடியவில்லை.

ஒரு நாள் 'ஒஹு' என்ற தீவிலிருந்து 'லோலேல்' என்ற அழகிய



வாலிபன் 'மாய்' தீவுக்கு வந்தான். ஓஹூ தீவின் இளவரசன் அவன். ஓஹூ மக்கள் அவனுக்கு மணம் முடித்துப் பார்க்க ஆசைப்பட்டார்கள். தனக்கேற்ற மனைவியைத் தேடியே அவன் வந்திருந்தான். அவன் முன்பே ஒரு மங்கையை விரும்பி மணக்க இருந்தான். திருமணமாகு முன்பு ஒரு நாள் அவள் ஒரு விபத்தில் கடலில் மூழ்கி இறந்துவிட்டாள். திடீரென்று தோன்றிய புயலில் அவள் ஏறி வந்து கொண்டிருந்த 'ஸர்ஃப் போர்டு' கவிழ்ந்து விட்டது கடலிலே. இது நடந்து இரண்டு வருடங்களாகிவிட்டன. அதன் பிறகு லோலேலின் உள்ளம் திருமணத்திலே நாட்டம் கொள்ளவில்லை. ஆனால் நாட்டு மக்கள் சும்மா இருப்பார்களா? ''இளவரசே! திருமணம் செய்து கொள்ளுங்கள். உங்களுக்குப் பிறகு இந்தத் தீவை ஆளுவதற்கு ஒரு வாரிசு வேண்டும்'' என்று வற்புறுத்தினார்கள். ஆகவே தனக்கேற்ற மனைவியைத் தேடிக் கிளம்பினான் இளவரசன் லோலேல். அழகும் துணிவும் மிக்க இளவரசி கேலாவின் புகழ் ஹவாய்த் தீவுகள் முழுவதும் பரவி இருந்தது. ஆகவே லோலேல் தனது படகை மாய்த் தீவின் கடற்கரையில் ஒதுக்கியதில் வியப்பில்லை. கேலா பற்றித் தான் கேட்ட செய்திகள் உண்மைதானா என்று அறிய விரும்பினான்.



அப்போது கேலா தன் தோழிகளுடன் கடலில் மூழ்கியும் நீந்தியும், ஸர்ஃப் பலகையில் மிதந்தும் கொட்டமடித்துக் கொண்டிருந்தாள். அத்தனை அழகான ஒரு பெண்ணை லோலேல் அது வரை கண்டதே இல்லை. எந்தப் பெண்ணும் சறுக்குப் பலகையில் இரு கைகளையும் அகல விரித்த நிலையில் கம்பீரமாக நின்று கொண்டு வந்ததை அவன் பார்த்ததே இல்லை. தகதகக்கும் சூரிய ஒளியில் பளபளக்கும் தாமிரச் சிலையாகத் தோன்றினாள் கேலா. அவளைப் பார்த்த உடனேயே அவன் உள்ளம் அவளிடம் சென்றுவிட்டது.

அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள விரும்பிய போது கேலா தன் நிபந்தனையைக் கூறினாள். லோலேல் சிரித்தான். ஏனென்றால், ஓஹூ என்ற அத்தனை பெரிய தீவில் உள்ள எத்தனையோ இளைஞர்களையெல்லாம் ஸர்ஃப் பலகை மிதப்பில் வெற்றி கொண்ட மிகச் சிறந்த நீச்சல்காரன் அவன்.

கேலாவும் லோலேயும் பலகைகளுடன் சீறி வரும் அலைகடலுக்குள் இறங்கிய காட்சி மெய் சிலிர்க்க வைத்தது. அருகருகே இருவரும் மீன்களைப் போல் சுருண்டு வரும் உயர்ந்த அலைகளின் மீது சவாரி செய்தபடி கடலுக்குள் ஊடுருவினார்கள். அலை மீதாக இருவரும் அருகருகே கரையை நோக்கி வந்தார்கள். சிலபோது கேலா முதலில் திரும்பினாள். சில வேளைகளில் லோலேல் வெற்றி கொண்டான். 'இவன் தனக்கேற்ற கணவன்தான்' என்ற எண்ணம் கேலாவின் உள்ளத்திலே ஏற்பட்டது.

ஒடுக்கமான படகிலே கடல் மீது செல்லும் சாகஸத்தின் போது கேலாவைவிடப் பல மடங்கு சிறந்தவன் லோலேல் என்பதை எல்லோரும் கண்டார்கள். அவன் அழகனாக மட்டும் இல்லை. ஆண்மை மிக்கவனாகவும் இருந்தான். ஒரு சமயம் இவர்கள் படகிலே கிளம்பியபோது புயல் வருவதற்கான அறிகுறிகள் தோன்றின. தன் சகோதரியைப் போக வேண்டாம் என்று எச்சரித்தான் மன்னன் காலோ. ஆனால் கேலா

வாடா மலர்!

ஒழுக்கம் இல்லாத மதம்
கனியில்லாத மரம்.
மதம் இல்லாத ஒழுக்கம்
வேரில்லாத மரம்.

—ஹெரால்டு குவாட்

பணம் சேரச் சேர மனமும்
மாறிக்கொண்டே போகும்.
பணத்தாசை பிடித்தவர்க்கு
உறவினர்கள் கிடையாது;
பெரியோர்களும் கிடையாது.

—ஸம்ஸ்கிருதப் பழமொழி



கேட்கவில்லை. லோலேலுடன் கடலுக்குள் போனதும் கடும் புயல் உருவாகி விட்டது. அதுவரை பயத்தையே அறியாத அவள் முதல் தடவையாக நடுங்கிப் போனாள். அந்த நிலையில் இளவரசன் லோலேல் காட்டிய துணிவும், சாமர்த்தியமும் அவளை மெய்சிலிர்க்க வைத்துவிட்டன. ஆக்ரோஷம்கொண்ட அலைகளின் மூர்க்கமான தாக்குதலிலிருந்து அவளை எத்தனை லாகவமாகக் காப்பாற்றிக் கரை சேர்த்துவிட்டான்? என்ன துணிச்சல்! எத்தனை பலம் பெற்ற கரங்கள்! எனக்கு ஏற்ற மணாளன்தான் இவன்' என்று மகிழ்ந்து போனாள் கேலா.

திருமணம் நிச்சயமாயிற்று. பளபளக்கும் மஞ்சள் சிவப்பு நிறங்களைக் கொண்ட பறவை இறகுகளினாலான திருமண ஆடையை மணமக்களின் தோள்களிலே அணிவித்தார்கள். மாய்த்தீவு மக்கள் அதுவரை கண்டிராத அளவிலே விருந்தும் விழாவும் கோலாகலப்பட்டன.

மலர்களால் அலங்கரித்துக்கொண்ட மங்கையர்கள் உல்லாசமாகப் பாடியபடி ஆடினார்கள். எங்கும் மகிழ்ச்சி, குதூகலம், கோலாகலம். திருமணக் கோலாகலமெல்லாம் முடிந்த பிறகு ஒரு நாள் லோலேல் தன் மனைவியிடம் கூறினான். ''அன்பே! நான் உளமாற நேசித்த ஒருத்தியை முன்பு கடலுக்குப் பலி கொடுத்தேன். அம்மாதிரி ஒரு நிலை மறுபடியும் எனக்கு ஏற்படுவதை நான் விரும்பவில்லை. ஆகவே என்னுடைய தீவில் உள்ள மலைகளுக்குப் போகப் போகிறேன். நாம் இருவரும் கடலிலிருந்து வெகுதூரத்துக்கப்பால் அங்கு ஆனந்தமாக வாழலாம். 'கடலில் சென்ற கேலா என்ன ஆனாளோ?' என்று கவலைப்படுவதிலிருந்தும் எனக்கு விடுதலை கிடைக்கும்' என்றான்.

இதைக் கேட்ட அலை அரசி கேலாவுக்கு எப்படி இருக்கும்? கடலே அவள் உயிர், உடல். கடலையே காண முடியாத, கடல் அலைகளிடையே நீந்தி மகிழ முடியாத ஓர் இடத்துக்குப் போய் வாழ வேண்டுமானால்? சறுக்குப் பலகையிலே மிதந்து செல்லும் போது கடற் காற்று முகத்திலே வந்து மோதுவதை ரசிக்க முடியாவிட்டால்? அவளால் தாங்கவே முடியவில்லை. ஆனால் ஒரு மனைவி கணவனின் விருப்பத்துக்கு அடங்கித்தான் வாழ வேண்டும், அவள் இளவரசியானாலும் சரி. ஆகவே கேலா மணாளனின் மலை வாசத்தில் மகிழ்ச்சியாக இருப்பதாகவே காட்டிக் கொண்டாள். அது மிகப் பெரிய அரண்மனை. இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தன, அவள் தனிமையைப் போக்க. ஆனால் இதனால் அவள் மகிழ்ச்சி அடைந்தாளா? திருப்திப்பட்டாளா? அதுதான் இல்லை.

ஒரு நாள் அவள் கணவன் அவளிடம், ''கேலா! இன்னமும் உன் உள்ளத்தின் சோகம் மறையவில்லையா? இன்னுமா நீ கடலை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான். அவளை முதலில் சந்தித்தபோது அவள் முகத்தில் கண்ட மலர்ச்சியை, சிரிப்பில் கேட்ட குதூகலத்தை அதன் பிறகு அவனால் காணவே முடியவில்லை.

கேலா இலேசாகச் சிரித்தாள். அதில் ஜீவன் இல்லை. ''அன்பே, நான் கேட்ட பழங் கதையில் வரும் அலைத் துளியைப் போல் இருக்கிறேன் நான். அந்தக் கதையை உங்களுக்குச் சொன்னால்தான் புரியும். கேளுங்கள்'' என்று சொல்லத் தொடங்கினாள்.

''மலைப் பிராந்தியத்தில் வாழும் மனிதன் ஒருவன் ஒரு சமயம் கடற் கரைக்குப் போனான். நீல அலைகள் நர்த்தனமாடி நகைத்துக் கொண்டிருந்தன, சூரிய ஒளியிலே. 'துள்ளி ஓடும் இந்த அலைகளிலே ஒன்றை என்னோடு எடுத்துச் செல்லுவேன். என் வீட்டிலே அது உருண்டு புரண்டு விளையாடுவது அழகாக இருக்கும்' என்று கூறியவாறே ஒரு மூங்கில் குழாயில் சிரிக்கும் ஒரு சின்ன அலையை அள்ளி அடைத்துக் கொண்டான். வீட்டுக்குப் போனதும் அந்த அலை நீரை ஒரு பெரிய கொட்டாங்கச்சியில் ஊற்றினான். அதன் அருகே அமர்ந்தபடி அது களித்துச் சிரித்துக் கலகலப்பதைக் காணக் காத்திருந்தான். ஆனால் கொட்டாங்கச்சி நீர் ஆடாமல், அசையாமல் சலனமற்றிருந்தது.

''அங்கு நான் கண்ட அலையா இது? அந்த ஆர்ப்பாட்டம், அழகுச் சிரிப்பு எங்கே?' என்று கத்தினான். கடலிலிருந்து கொண்டு வரப்பட்ட அலைநீர் அங்கு இருந்தது. ஆனால் அவன் எதிர்பார்த்த ஆரவாரமோ அழகுச் சிரிப்போ அதில் இல்லை. செத்துப் போனதைப் போலச் சலனமற்றிருந்தது. வெண்ணுரைகளை உருவாக்கும் அலைகளை எழுப்ப அங்கு கடற் காற்று இல்லை. சூரிய ஒளியிலே குதி போட்டு நடனமடா அதன் அலைத் தோழிகள் அருகில் இல்லை.

''என்னுடைய ஆசை அலைக் குஞ்சு நோய்வாய்ப்பட்டிருக்கிறது. அதனால் நடனமாடவோ சிரித்து மகிழவோ முடியாது கடல்த் தாயைப் பிரிந்த ஏக்கத்திலே அது செத்துக் கொண்டிருக்கிறது. இதை அதன் தாயிடமே கொண்டு சேர்த்து விடுகிறேன் என்று கடல் நீருடன் கிளம்பினான் மலைவாசி. கடற்கரை அருகே வந்தான். மூங்கில் குழாயிலிருந்த நீரை மெதுவாகக் கடலில் கொட்டினான்.

அடுத்த விநாடியே மூங்கில் குழாயிலிருந்து விடுபட்ட கடல் நீர் கலகலவென்று சிரித்தது. குதி போட்டுக் கொக்கரித்து அலைத் தோழிகளோடு கை கோத்துக் கொண்டு உருண்டு உருண்டு ஓடியது. மலைவாசி ஆழ்ந்த பெருமூச்சை அவிழ்த்து விட்டான். 'உண்மைதான். என் அலைக் குஞ்சு அதன் தாயைப் பிரிந்த ஏக்கத்தினால்தான் அப்படி அசைவற்றுக் கிடந்தது' என்று கூறிக் கொண்டே தன் இருப்பிடத்தை நோக்கி நடக்கலானான்.''

கேலாவின் இந்தக் கதையைக் கேட்ட லோலேல் வெட்கம் அடைந்தான். தன் மனைவியை வேதனைக்குள்ளாக்கவேண்டுமென்பது அவன் நோக்கமல்ல. அவளை இழந்து விடுவோமோ என்ற பயத்தினால்தான் அவன் மலைவாசியானான்... 'மகிழ்ச்சி இல்லாமல் பத்திரமாக மட்டும் இருப்பதினால் என்ன நன்மை ஏற்பட்டுவிடும்?' லோலேல் உடனே கூறினான். ''கேலா, நாம் மறுபடியும் கடற்கரைப் பகுதிக்கே போய் வாழலாம்.''

அலைகடலையொட்டி அழகான ஒரு மாளிகையை அவளுக்காகவே கட்டினான். கேலாவின் மங்கிய முகத்தில் மறுபடியும் பிரகாசம் ஏற்பட்டது. தன் குழந்தைகளோடு கேலா கடலிலே நீந்தி விளையாடி மகிழ்ந்தாள். ஸர்ஃப் பலகையிலே முன்போலவே அலைகள் மீதாகத் தாவிப் போனாள். கடற் காற்று அவள் கருங்கூந்தலினுள்ளே புகுந்து ஓடியது. உப்புக் காற்று அவள் கன்னத்தை அன்புடன் வருடிச் சென்றது. கேலா மறுபடியும் மகிழ்ச்சியின் மறு உருவாக மாறினாள்.



''கோடையிலே கோட்டு என்ன வேண்டிக் கிடக்குது?
குளிர்ந்த நீரில் விழுந்து புரள ஓட வேண்டாமோ?''
ஜாடையிலே இந்தக் கேள்வி உனக்குத் தோன்றினால்—நான்
ஜவாப்பல்ல — இந்த இடம் 'ஊட்டி' என்பதால்.

—குடுக்கையார்

வண்ணப்படம்: ஆர். பி. எஸ். மணி

கொய்யாப் பூவே!

கொய்யாப் பூவே, கொய்யாப் பூவே,
தரையில் கிடப்பதேன் ?
குருவி காகம் மரத்தில் ஏறிக்
கொத்திப் போட்டதோ ? இல்லை,
பெரிய காற்று விரைந்து வந்து
பிய்த்துப் போட்டதோ ?

கொய்யாப் பூவே, கொய்யாப் பூவே,
தரையில் கிடப்பதேன் ?
குறும்புப் பையன் எறிந்த கல்லால்
பிரிய நேர்ந்ததோ ? இல்லை,
கொறிக்கும் அணில்தான் உன்னைக்
பறித்துப் போட்டதோ ? (இழே

கொய்யாப் பூவே, கொய்யாப் பூவே,
தரையில் கிடப்பதேன் ?
பூவே, நீயும் காயாவாய்,
காயிலிருந்து கனியாவாய்,
கனியை உடனே பறித்திடலாம்,
கடித்துச் சுவைத்து மகிழ்ந்திடலாம்
என்றே நானும் சில நாளாய்
எண்ணியிருந்தேன். ஆனாலோ, என்
எண்ணைத் இனிலே மண்விழவா
இப்படி மண்ணில் நீவிழுந்தாய் !

• அழ. வள்ளியப்பா •




எறும்புகள்

சிற்றெறும்புக் கூட்டமே
சேர்ந்து செல்லும் அழகைப்பார்
புற்றமைத்த விந்தையை
புரிந்து நாமும் போற்றுவோம்

சின்னச்சின்ன எறும்புகள்
சேர்ந்துவாழும் அருமைபார்
இன்னமுதாம் உணவினை
எடுத்துச்சேர்க்கும் தன்மைபார்

கிழட்டெறும்பு பசியினால்
கிறங்கிவிழ அடுத்தது
வழக்கமாய்த்தா னுண்டதை
மகிழ்ந்துமிழ்ந்து தந்திடும்

ஒற்றுமையாய் உழைத்திடும்
ஒன்றையொன்று விரும்பிடும்
கற்றுணர்ந்து அதனிடம்
கவலையின்றி வாழுவோம்.



கொ. மா. கோதண்டம்




2

சிவபெருமானை உயிருக்குயிராக உணர்ந்த அறுபத்தி மூன்று அரும் பக்திமான்களின் சரித்திரங்களைச் சேக்கிழார் 'திருத்தொண்டர் புராணம்' என்ற அரிய நூலில் பாடியிருக்கிறார். புராணங்களில் எல்லாம் உயர்ந்ததாய்ப் 'பெரிய புராணம்' என்றே போற்றப்படும் இந்நூலில் அவர், திண்ணப்பர் குடுமித் தேவரைக் கண்ட மாத்திரத்தில் ''அன்புருவம் ஆனார்'' என்கிறார்.

''ஆனார்'' என்று புராணமே திண்ணனை மரியாதையாகச் சொல்வதால் நாமும் இனி திண்ணப்பர் என்று சொல்லலாம். சிவபெருமானிடம் திண்ணப்பருக்குச் சொல்லி முடியாத அன்பு பொங்கி எழுந்தது.

நாம் சாதாரணமாகத் தெய்வ பக்தி என்று சொல்கிறோமே, அது போன்றதல்ல, அவருக்கு ஏற்பட்ட உணர்ச்சி. நாம் 'தெய்வம் நம்மை விட மிகவும் சக்தி வாய்ந்தது. நாமோ பாவங்கள் செய்கிற சின்னஞ் சிறியவர்கள்' என்ற எண்ணத்தினால் ஸ்வாமியிடம் மிகுந்த மரியாதையும், பயமும் கொண்டிருக்கிறோம். நம்முடைய பக்தி என்ற அன்பில் இந்த மரியாதையும் பயமுமே அதிகம். ஆனால் திண்ணப்பருக்கோ ஸ்வாமியிடம் பயம், மரியாதை இவை ஏற்பட்டுவிடவில்லை. இவை உண்டானால் உரிமையோடு அன்பைக் கொட்ட முடியாமல் கட்டுப்பாடு இருக்கும். திண்ணப்பருக்கோ கட்டுக் கடங்காத அன்பு பொங்கி வந்ததால், 'ஸ்வாமி மகாப் பெரியவர், நாம் சின்னஞ் சிறியவர்- அவர் குற்றமே இல்லாதவர், நாமோ பாவி' என்ற எண்ணங்கள் குறுக்கே நிற்கவில்லை. 'நம் அன்பு முழுவதையும் பெற வேண்டிய ஸ்வாமி இவர்- தன்



அன்பு முழுவதையும் நம்மீது பொழிகிற ஸ்வாமி இவர்' என்ற எண்ணம் மட்டுமே அவருக்கு இருந்தது.

இந்த எண்ணமும் ஸ்வாமியே அவருக்குத் தந்தது தான். ஸ்வாமிக்கு 'எல்லோரும்தான் என்னிடம் பயந்து, நடுங்கிப் பக்தி செலுத்துகிறார்கள். ஒருத்தனாவது உரிமையுடன் என்னைச் சமமாக எண்ணிக் கட்டில்லாமல் அன்புசெலுத்தட்டுமே' என்று தோன்றியதாம்! அவருடைய ஆசையைத் தீர்க்கவே திண்ணப்பர் பிறந்திருந்தார்.

இப்போது குடுமித் தேவரைத் திண்ணர் கண்டாரோ இல்லையோ, உடனே 'ஸ்வாமி தனக்குக் குழந்தை, தான் அதற்கு அம்மா' என்ற உணர்ச்சி அவருக்கு வந்து விட்டது!

உலகத்திலேயே அம்மாதானே மற்ற எல்லாரையும் விட அன்பாக இருப்பவள்! அன்புருவான திண்ணர் ஸ்வாமிக்கே அம்மாவாகத் தம்மைக் கருதிக் கொண்டார்.

குழந்தையைக் கண்ட தாய் போல லிங்கத்திடம் ஓடிச் சென்று அதைக் கட்டிக் கொண்டு, உச்சி மோந்து, முத்தமிட்டார். மயிர்க்கூச்சு எடுத்தது. கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்தது. ''அட கண்மணியே! எனக்குக் கிடைத்தே விட்டாயே!'' என்று சொல்லிச் சொல்லி ஆனந்தப் பட்டார்.

ஆனந்தம் துயரமாயிற்று. குடுமித் தேவர் சகல சக்தி வாய்ந்த ஸ்வாமி என்ற எண்ணமே போய், குழந்தையாகி விட்டதால், ''இந்தக் காட்டில் தன்னந் தனியாக இருக்கிறாயே, உன்னை யார் பார்த்துக் கொள்கிறார்கள்? யாரும் இல்லையா?'' என்று கேட்டுக் கண் கலங்கினார்.

அவர் பார்வையில் லிங்கத்தின் தலையில் இருந்த வில்வ தளங்களும், தும்பைப் பூவும் தெரிந்தன. ''உன்னைப் பார்த்துக் கொள்ள யாரோ ஒருவர் இருக்கிறார் என்று தெரிகிறது. அவர்தான் இந்தப் பூவையும் இலைகளையும் உன் தலையில் வைத்திருக்க வேண்டும். ஆனால் அவரால் எப்படி உன்னை விட்டுப் பிரிய முடிகிறது?'' என்றார்.

திண்ணரின் விசித்திரச் செயல்களைப் பார்த்து இது வரையில் வாயடைத்திருந்த நாணன் இப்போதுதான் பேசினான்: ''இளவரசே! நீர் இவருக்கு ஆளில்லை என்று கவலைப்படாமல் என்னோடு வந்து சேருங்கள். இவரிடம் பரம பக்தி கொண்ட குருக்கள் ஒருவர் இருக்கிறார். முன்பு உம் தந்தையோடு இங்கே வந்தபோது நானே பார்த்திருக்கிறேன் — சிவகோசரியார் என்ற அந்தக் குருக்கள் இவருக்கு ஜலத்தைக் கொட்டிப் பூப் போட்டு, சோறு பழம் ஆகியன படைத்து மந்திரங்கள் சொல்லியிருக்கிறார். நாம் முருகனுக்கு ஒருவிதத்தில் பூசை செய்கிறோம். இவருக்கு வேறு விதத்தில் செய்ய வேண்டும். இவருக்கு எப்படிப் பிடிக்குமோ அவ்விதத்தில் செய்யச் சிவகோசரியருக்குத்தான் தெரியும். அவரே தொடர்ந்து செய்வார். நீர் பேசாமல் என் பின் வாரும். எனக்குப் பசி உயிர் போகிறது'' என்றான்.

அவனுக்கு எப்படியாவது தங்கள் இளவரசனைப் பக்தி வெறியிலிருந்து மீட்டு நாட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்கிற கவலை.

''என்ன சொன்னே?'' என்று உறுமினார் திண்ணப்பர். ''அந்த ஐயர் பண்ணுகிறதை நான் பண்ணமாட்டேனா? அவரும் பண்ணட்டும், நானும் பண்ணுகிறேன். இவர் மேல் தண்ணி கொட்டணும், பூப்போடணும், படையல் படைக்கணும் — அவ்வளவுதானே? நானும் இதுங்களைச் செய்யறேனே! என் குழந்தைக்கு எது பிடிக்குமோ அதைச் செய்ய எனக்கா தெரியாது? இப்போதே புறப்பட்டேன் — இதோ போய்க் காடன் சமைத்திருக்கிற பன்றி — மாமிசத்தைக் கொண்டு வந்து படையல் போடுவேன்'' என்று புறப்பட்டார் திண்ணப்பர்.

'இந்த மட்டில் இங்கேயிருந்து புறப்பட்டாரே! ஆற்றங் கரையில் காடனும் இருக்கிறான். இருவருமாக இளவரசரை நிர்ப்பந்தமாகவாவது இழுத்துக் கொண்டு உடுப்பூருக்குப் போய்ச் சேரலாம்' என்று எண்ணினான் நாணன்.

ஆனால் திண்ணராலோ லேசில் அங்கேயிருந்து வர முடியவில்லை. நாலு அடி நடந்ததும் திரும்பி லிங்கத்தைப் பார்ப்பார். ''உன்னைவிட்டு எப்படிப் போவேன்?'' என்பார். மீண்டும்



அருகே வருவார். ''உனக்குப் படையல் பிடிக்குமா? உனக்குப் பிடித்ததைத்தானே நான் செய்ய வேண்டும்? குழந்தையைப்பட்டினி போடுகிறேனே'' என்று சொல்லிக் கொண்டு புறப்படுவார்.

கடைசியில் ஒருவாறாகப் பொன்முகலியாற்றங் கரையில் காடன் சமையல் செய்து கொண்டிருந்த இடத்துக்கு நாணனோடு வந்து சேர்ந்தார்.

சோதனை போல் இத்தனை நாழிகை ஆகியும் அந்த மாமிசம் வேகவேயில்லை.

பொறுமையிழந்த திண்ணப்பர், ''நீ போ, அப்பாலே!'' என்று காடனைத் தள்ளிவிட்டுத் தாமே மிகவும் சிரத்தையுடன் மாமிசத் துண்டுகளை அம்பிலே கோத்துத் தீ மேல் புரட்டிக் காட்டி வதக்கலானார். 'முழுவதும் வேகிற வரையில் காத்திருக்க வேண்டாம்; வெந்த பகுதிகளை விரைவில் எடுத்துச் சென்று ஸ்வாமிக்குப் படைத்துவிட வேண்டும்' என்று அவருக்குத் தோன்றியது.

தேக்கிலைகளால் ஒரு கல்லை (தொன்னை) செய்தார். வெந்ததாகத் தோன்றிய ஊன் துண்டுகளைத் தம் வாயிலேயே போட்டு அதுக்கி அதுக்கிப் பார்த்து, நன்கு பக்குவமான பகுதிகளை எல்லாம் ''குடுமித் தேவருக்கு'' என்று கல்லையில் உமிழ்ந்து கொண்டார். மீதம் அனைத்தையும் 'தூ, தூ' என்று ஆற்று மணலில் துப்பிவிட்டார்!

தாம் உண்ணவில்லை, தம் நண்பர்கள் உண்ணவில்லை என்ற நினைப்பெல்லாமே அவருக்குத் துளிக்கூட இல்லை. ஸ்வாமியிடம் வைத்த அன்பு ஒன்றே அவரைக் கடல் போல் மூழ்க்கி விட்டிருந்தது. தோழர்கள் கேட்ட கேள்விகளுக்கு விடை சொல்லாமல், அவர்கள் கண்டித்ததற்காகவும் கோபிக்காமல் 'குழந்தை'யின் பட்டினியைத் தீர்ப்பதற்காக ஊன் வேகலைச் சேகரித்தபடியே இருந்தார். கல்லை ஒருவாறு நிரம்பிற்று.

இறைச்சிக் கல்லையுடன் இறைவனை நோக்கி இரைக்க இரைக்க ஓடுகிற திண்ணரைக் கண்டு வெலவெலத்து நின்றனர் நண்பர் இருவரும்.

''இனி இவர் நம் குலத்துக்குத் திரும்பமாட்டார். அரசாட்சி செய்ய வரமாட்டார். பட்டாபிஷேகத்துக்கு முதற்படியாகவே வேட்டைக்குப் புறப்பட்டு வந்தோம் - கடைசியில் பட்டத்து இளவரசரையே பறிகொடுத்துவிட்டோம். நாம் இருவர் மட்டும் இவரை வலிந்து இழுத்துச் செல்ல முடியாது' என்று நாணனும் காடனும் துக்கப்பட்டனர். 'இந்தப் பைத்திய வெறியைக் குணப்படுத்தத் தேவராட்டியை அழைத்து வருவோம். மன்னர் நாகனையும் அழைத்து வருவோம்' என்று உடுப்பூருக்குப் புறப்பட்டனர்.

பொன் முகலியாற்றைக் கண்ட திண்ணப்பருக்கு, குடுமிநாதர் மீது குருக்கள் தண்ணீர் கொட்டுவார் என்று பாணன் சொன்னது நினைவுக்கு வந்தது. 'ஐயனுக்கு இந்த உபசாரம் பிடிக்கும் எனில் அடியேனும் இதைச் செய்வேன்' என எண்ணினார். ஆனால் நீர் முகந்து செல்லப் பாத்திரம் ஏதுமில்லையே அவரிடம்! 'அதனாலென்ன? இதோ என் வாய் இருக்கிறதே. இது உப்பும் அளவுக்கு நீரை நிரப்பிக் கொண்டால் அரைச் சொம்பு பிடிக்கும்' என்று எண்ணினார். ஆற்று நீரை வாய் நிறைய அடக்கிக் கொண்டார். அதை அப்படியே லிங்கத்தின் தலையில் உமிழ்ந்து விட வேண்டும் என அவர் நினைத்துக் கொண்டவுடன் உச்சியில் பத்திர, புஷ்பங்கள் வைத்திருந்தது நினைவுக்கு வந்தது. 'ஆம், இவையும்கூட என் சாமிக்குப் பிடித்தமானவை என்று நாணன் சொன்னானே. நானும் பூ, பச்சிலை எடுத்துச் செல்வேன்' என்று சொல்லிக் கொண்டார். ஈசனுக்கு அர்ப்பணம் செய்யத் தக்க மலர்களும், பத்திரங்களும் இன்னதென அறியாமல் கண்ட கண்ட காட்டுத் தழைகளையும், மணமற்ற பூக்களையும் பறித்தார். தேக்கிலைக் கல்லையுடன் இவற்றையும் கையில் வைத்துக் கொள்வது சிரமமாயிருந்தது. எனவே சற்றும் யோசியாமல், வேட்டையாடி அலைந்த புழுதியில் சிக்குப் பிடித்திருந்த தமது முடியிலேயே இம்மலர்களையும் இலைகளையும் சொருகிக் கொண்டார். 'அங்கே போனதும் இவற்றை எடுத்து என் ஐயனுக்குப் போடுவேன்' என்று நினைந்து இன்புற்றார்.

குடுமித் தேவரை அடைந்தார், தமது குடுமியில் அவருக்கான மலர்களைச் சூடிக் கொண்டிருந்த திண்ணனார். வாய் வலிக்க ஏந்தி வந்த நீரை லிங்கத்தின் தலையில் கொப்புளித்தார். தழைகளை, பூக்களை அங்கே அணிவிப்பதற்காகத் தம் தலையிலிருந்து கையில் எடுத்தவர், அங்கே பழைய பூக்கள் இன்னும் சில ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து, அவற்றை அகற்றிவிட்டு ஐயனை அலங்கரிக்க வேண்டும் என்கிற ஆர்வத் துடிப்பில், இது வரையில் செய்த காரியங்களைத் தோற்கடிக்குமாறு இன்னொன்று செய்தார்.

கையில் வைத்துக் கொண்டிருந்த இலை, பூக்களைக் கீழே வைத்துவிட்டு, பழம் பூவை அகற்றி, மறுபடியும் புதியதைக் கீழேயிருந்து பொறுக்கி எடுக்க அவருக்குப் பொறுமையில்லை. அன்பின் வேகம் முட்டி மோதிக் கொண்டு வந்ததால், தம் செருப்புக் காலைத் தூக்கி அதனாலேயே லிங்கத்தின் முடி மீது இருந்த பழைய புஷ்பங்களை எற்றித் தள்ளினார்.

பிறகு தாம் வாயினால் கடித்து ருசி பார்த்துத் தேர்ந்தெடுத்திருந்த பன்றி மாமிசத் துண்டுகளை ஐயனுக்கு முன் படைத்தார். படையலை ஸ்வாமி நேரே உண்பதில்லை- அதன் சாரத்தை மட்டும் நாம் காணாமல் இழுத்துக் கொள்வார் என்று முன்னரே அறிந்திருந்தாரோ, விட்டாரோ ? இல்லாவிடில் குடுமித் தேவர் அதை உண்டேயாக வேண்டும் என்று மண்டையை உடைத்துக் கொண்டிருப்பார் !

அபிஷேகம், அர்ச்சனை, நிவேதனம் ஆகிய வார்த்தைகளைக்கூட அவர் அறிந்தவரல்ல. ஈசனுக்குகந்த மலர் எது, இலை எது, நிவேதனம் எது என அறியார். இவ்வுபசாரங்களைச் செய்வதற்கான ஆசார விதிகளையும் அறவே அறிய மாட்டார். நாம் உபயோகித்த மிருதியை இறைவனுக்கு அளிக்கவே கூடாது என்பது அவருக்குத் தெரியவில்லை. உபசாரம் எது, அபசாரம் எது என்றே அவருக்குத் தெரியாது. அன்பு ஒன்றுதான் அவர் அறிந்த ஒரே விஷயம். குடுமித் தேவருக்குப் பிடிக்கும் என்று குருக்கள் எதைச் செய்தாரோ, அதைத் தாமும் செய்து அவரைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்றே இப்படிச் செய்தார். அதிலேயே தாமும் எல்லையில்லா இன்பம் கண்டார்.

ஐயனை விட்டுச் சிறிதும் நகரவில்லை திண்ணனார். இருள் பரவி வந்தது. 'ஐயனுக்குத் துஷ்ட மிருகங்களின் இன்னலின்றி இரா முழுதும் காவல் நிற்பேன் என்று கண் கொட்டாமல் நாலு யாமமும் வில் பிடித்து நின்றார். 'உலகைக் காக்கும் கடவுளுக்கு நமது காவல் எதற்கு?' என்ற கேள்வியே எழவில்லை. ஏனெனில், இவர் 'ஐயன் — அடிமை. என்று சொல்லிக் கொண்டாலும் அவரைக் குழந்தையாகவும், தம்மைத் தாயாகவுமே எண்ணினார் அன்றோ ?

பொல்லெனப் பொழுது விடிந்தது. 'பொல்லா விலங்குகள் இனி இங்கு வாரா. இப்போதே சென்று என் தேவருக்கு ஊனும், நீரும், பூவும் கொண்டு வருவேன்' எனப் புறப்பட்டார்.

(தொடரும்)

ஜனக் கணக்கு ஏன்?

சென்ஸஸ் எனப்படும் ஜனக் கணிப்பு முறை மிகவும் பழமையானது. வரி வசூலிப்பதும் போர் வீரர்களைப் பெருக்குவதும் உலகில் தோன்றிய நாளிலிருந்தே ஜனக்கணிப்பும் தோன்றிவிட்டது என்று கூறலாம். எத்தனை பேரைப் போர்க் களத்துக்கு அனுப்பலாம், வரியாக அரசாங்கத்துக்கு எத்தனை வருமானம் கிடைக்கும் என்பதை அறிந்து கொள்வதற்காகவே சென்ஸஸ் முறை தோன்றியது.

சென்ஸஸ் கணக்கீட்டின்போது அநேக நாட்டில் கேட்கப்படும் கேள்விகள் இவைதான்: ஒரு வீட்டில் வசிப்போரின் வயது, ஒருவருக்கொருவர் உள்ள உறவு, பிறந்த ஊர், எந்த நாட்டைச் சேர்ந்தவர், தொழில், தொழில் செய்யும் இடம், மணமானவரா, குழந்தைகள் உண்டா ஆகியவைதான். விவசாயியானால் அவர் நிலம், சாகுபடி செய்யும் முறை, கால் நடைகள் பற்றியும் கேட்கப்படும்.

இப்படி எல்லாத் தகவல்களும் சேகரிக்கப்பட்டதும் இவைகளைக் கூட்டுவார்கள். பிறகு பல பிரிவுகளாகப் பிரிப்பார்கள். இதன் பிறகு இந்தப் புள்ளி விவரங்கள் அரசாங்கத்துக்கு உதவும் நிலையில் தரப்படும். உதாரணமாகக் குறிப்பிட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு இன்னும் எத்தனை பள்ளிக்கூடங்கள் தேவை என்பதை அரசு நிர்ணயிக்கக் கூடும். வருங்காலத்தில் பென்ஷனுக்கு எத்தனை தொகையை அரசு செலவிட வேண்டும் என்று அறிய முடியும். ஜனத் தொகை கூடியுள்ளதா குறைந்துள்ளதா என்பதையும் அறிய முடியும். மக்களின் சமூக, பொருளாதார நிலை முன்னேறியுள்ளதா மோசமாகி வருகிறதா என்பதை அறிந்து கொள்ள முடியும். எந்தத் தொழில் முன்னேறுகிறது எது க்ஷீணிக்கிறது என்பது தெரியும்.

ஜனத் தொகையின் அடிப்படையில் அரசியல்வாதிகள் தேர்ந்தெடுக்கப்படும் இடங்களில் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் எவ்வளவு பிரதிநிதிகள் சட்டசபைக்கு வரலாம் என்பதைக் கணிக்க சென்ஸஸ் உதவுகிறது. சட்டமியற்றவும், சமூகப் பொருளாதார விஷயங்களில் தக்க மாற்றங்களைச் செய்யவும் சென்ஸஸ் கணக்கு உதவுகிறது.





பட்டதாரி

கல்லூரிகளிலிருந்து படிப்பு முடிந்து வெளிவரும்போது அவர்களுக்கு 'Bachelors' என்ற பட்டம் கொடுத்து அனுப்புகிறார்கள். ஆங்கிலத்தில் 'பாச்சலர்' என்றால் விவாகமாகாதவன் பிரம்மச்சாரி என்று பொருள். படித்துப் பெறும் பட்டத்தோடு விவாகமாகாதவன் என்ற பதத்தை என்ன காரணத்தினால் சேர்த்தார்கள் என்பதைத் திட்டவட்டமாக யாராலும் விளக்க முடியவில்லை. ஒரு மாணவன் இலக்கியப் பாடங்களில் தேர்ச்சி பெற்றவனானால் —இதை ஆர்ட்ஸ் என்பார்கள் — அவன் பி.ஏ. என்ற பட்டத்தைப் பெறுகிறான். அதாவது 'பாச்சலர் ஆஃப் ஆர்ட்ஸ்' ஒரு மாணவன் விஞ்ஞானப் பாடங்களில் விசேஷப் படிப்புப் படித்தானானால் அவனுக்கு பி.எஸ்ஸி என்ற பட்டம் கிடைக்கும் — பாச்சலர் ஆஃப் ஸையன்ஸ்.

அனேகம் பேர் இத்துடன் தங்கள் கல்லூரிப் படிப்பை நிறுத்திவிடுவதில்லை. மேலும் தொடர்ந்து படிக்கிறார்கள். இதன் முடிவில் இவர்கள் பெறுவது எம்.ஏ அல்லது எம்.எஸ்ஸி. (மாஸ்டர் ஆஃப் ஆர்ட்ஸ், மாஸ்டர் ஆஃப் ஸையன்ஸ்) சிலர் இதற்கு மேலும் படிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஆராய்ச்சி மேற்கொண்டு நிருபணக் கட்டுரை (தீஸிஸ்) தயாரித்தளிக்கிறார்கள். இதற்காக இவர்களுக்குக் கிடைக்கும் பட்டம் பிஹெச். டி. (டாக்டர் ஆஃப் ஃபிலாஸஃபி) இவைகளைத் தவிர தொழில் புரிவதற்காகப் படிக்கும் பாடங்களுக்கான பட்டங்கள் வேறு—டாக்டர்கள், வக்கீல்கள், ஆடிட்டர்கள், என்ஜினீயர்கள் ஆகியோருக்கானவை. இன்றைய கல்வி முறை விவசாயம், வன இயல், கட்டிடக் கலை, என்ஜினீரிங், ஃபார்மஸி, பல் டாக்டர், நர்ஸிங் ஆகியவைகளுக்கும் டிகிரி டிப்ளமோ வழங்குவதற்கு வழி செய்துள்ளது. இன்னும் வருங்காலத்தில் பல்வேறு துறைகளுக்கும் முறையான படிப்பையும் பட்டமளிப்பையும் நம் கல்வி முறை விரிவுபடுத்தக் கூடும்.

லத்தீன் மொழி

மேலை நாட்டினர் தங்களை நாகரிக மிக்கவர்களாகச் செய்த ஒரு மொழியைச் செத்துப் போன மொழி என்கிறார்கள். அதுதான் லத்தீன் மொழி. நமது நாட்டில் சம்ஸ்கிருதம் போல் அறிவாளிகள் பயிலும் மொழியாக இன்று விளங்கி வருகிறது லத்தீன் மொழி. பெரும்பாலோராலும் பேசவோ, பயிலவோபடாத ஒரு மொழியாக இன்று லத்தீன் விளங்கினாலும் ஒரு காலத்தில் அது செல்வாக்கு மிக்க மொழியாக இருந்தது.

கி. மு. 753ல் ரோம் ஸ்தாபிக்கப் பட்டதும் அந்தச் சிறிய நகரம் வளரலாயிற்று. நகரைச் சுற்றி ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மக்களால் பேசப் பட்டது ஒரு மொழி. திபர் பள்ளத் தாக்கில் வாழ்ந்த லாதினி (Latini) என்ற இன மக்களின் நினைவாக அந்த மொழி லத்தீன் எனப் பெயர் பெற்றது. ஆரம்ப கால லத்தீன் மொழி என்பது ரோம் நகரைச் சூழ்ந்துள்ள பல இன மக்கள் பேசிய மொழிகளின் கூட்டுக் கலவையான ஒரு மொழி. அது கரடு முரடானதாகவும் நளினமற்றும் விளங்கியது. ஆதி கால லத்தீன் மொழி பற்றிய குறிப்புக்கள் மிகச் சிலவே கிடைத்துள்ளன.

எழுதவோ படிக்கவோ தெரியாத சராசரி மனிதன் நாடக அரங்குகளில் ஆர்வங் காட்டுவதைக் கண்ட லத்தீன் மொழி எழுத்தாளர்கள் அவர்களை மகிழ்விக்க நாடகங்களை லத்தீன் மொழியில் உருவாக்கினார்கள். இந்தச் சமயத்தில் லத்தீன் பல வழிகளில் முன்னேற்றமடைந்தது. சட்ட திட்டங்களும் இலக்கணமும் கொண்ட லத்தீன்மொழி தோன்றியது. லத்தீன் மொழிக்கு அழகும் ஆக்கமும் ஊட்டிய பிற்கால எழுத்தாளருக்கு உறுதியான அஸ்திவாரம் இடப்பட்டது. அப்போதுதான். இலக்கிய லத்தீன் மொழி இப்படி வளர்ந்து கொண்டு வந்தாலும் ரோம் நகர மக்களின் பேச்சு மொழி கொச்சையான லத்தீனாகவே இருந்தது. எழுதும் மொழிக்கும் பேசும் மொழிக்கும் பெருத்த மாறுபாடு. ரோம் நகரில் அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்கள், வளம் பெற்ற லத்தீன் மொழியைப் பேசவில்லை. அதிகம் படித்த அறிவாளிகளிடம் மட்டுமே பண்பட்ட லத்தீன் மொழி புழக்கத்தில் இருந்தது.





அமெரிக்கா...?

புது உலகமான அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதற்குக் கொலம்பிகா என்று பெயரிடாமல் அமெரிக்கா என்று பெயரிடுவானேன்? இப்படி மாறுபட்ட பெயர் ஏற்பட்டது விதி செய்த ஒரு சிறு தவறுதலால்தான். கொலம்பஸ் தன் முதல் பிரயாணத்தின் போது 1492 அக்டோபர் 12ல் முதல் முதலாக ஒரு நிலப்பரப்பைக் கண்டார். அது ஸான் ஸால்வடார். ஆனால் அமெரிக்காக் கண்டத்தின் ஒரு பகுதி அல்ல அது. பஹாமாவிலுள்ள வாட்லிங் தீவாகும். தான் இந்தியாவைக் கண்டு விட்டதாகத்தான் அப்போது எண்ணினார் கொலம்பஸ்.

மேலும் பிரயாணப்பட்டார் கொலம்பஸ், ஜப்பானைக் காண்பது அவர் குறி. ஆனால் அவர் கண்டதோ கியூபாவையும், ஹிஸ்பனோலியாவையும்.

இரண்டாவது பயணத்தில் — 1493 செப்டம்பர் 24 — கன்னித் தீவுகள் பலவற்றையும், போர்டோ ரீகோ, ஜமைக்கா ஆகியவைகளையும் கண்டார். எப்படியும் இந்தியாவைக் காண்பேன் என்ற உறுதியோடு மூன்றாவதுபயணத்தில் 1498ல் டிரினிடாடையும், தென் அமெரிக்காவையும் தொட்டார். ஆனால் பல தொடர் தீவுகளைத் தாம் கண்டதாக எண்ணினார். இதனிடையே அமெரிகோ வெஸ்பூசி என்ற கடற் பிரயாணக்காரர் தாம் தென் அமெரிக்காவின் பிரதான பகுதிகளைக் கண்டதாக உரிமை கொண்டாடினார். 1501ல் பிரயாணம் செய்த வெஸ்பூசி தன்னுடைய கடிதங்களில் தாம் ஒரு புதிய கண்டத்தைக் கண்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்தத் தகவல் ஜெர்மனியைச் சேர்ந்த தேசப் படம் தயாரிக்கும் ஒருவரிடம் கிடைக்கவே தான் தயாரித்த தேசப் படத்தில் புதிய கண்டத்துக்கு அமெரிகோ வெஸ்பூசியின் நினைவாக அமெரிக்கா என்று பெயர் சூட்டிவிட்டார். அமெரிக்காவை முதலில் கண்டது கொலம்பஸானாலும் புகழ் என்னவோ இன்னொருவருக்குப் போயிற்று!

பள்ளிக்கூடத்திலிருந்து நண்பர்களுடன் வந்து கொண்டிருந்த சேகர், அவர்களுக்கு முன் சென்று கொண்டிருந்தவரின் தலையைப் பார்த்து நண்பர்களிடம் கேட்டான்: ''டேய், பாலு, நீ பிறை நிலா பார்த்திருக்கிறாயா?''

சேகர் ஏன் இப்படிக் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்டான் பாலு. ''டேய், சும்மா இருடா'' என்றான்.

''பிறை நிலா பார்த்ததில்லையா? சரி போகட்டும். அணுகுண்டு விழுந்த இடத்தைப் பற்றியாவது கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்றான்.

''சேகர், நீ பேசாமல் வரமாட்டே?'' என்றான் இன்னொருவன்.

''இவன் யாருடா? சுத்தப் பயந்தாங்கொள்ளியா யிருக்கான். பாலைவனம் எப்படி இருக்கும் தெரியுமா?'' என்றவன், ''அதோ பார், அந்தத் தலையைப் போல் இருக்கும்'' என்றான் மெதுவாக.

சேகர் தன் நண்பர்களிடம் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டே யாவது கேலி செய்து கொண்டே வருவான். பிறர் மனம் நோகும்படி பேசுவான். இன்று இவரிடம் நன்றாக மாட்டிக் கொண்டான்'' என்று அவர்கள் மனத்துக்குள் நினைத்தார்கள்.

''உன் பேர் என்ன? எந்த வகுப்புப் படிக்கிறாய்?'' என்றார் அவர்.

''எட்டாம் வகுப்புப் படிக்கிறேன். நான் உங்களை ஒன்றும் சொல்லவில்லை'' என்று சமாளித்தான் சேகர்.

''உண்மையை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறாயே? உண்மை பேசக் கற்றுக்கொள். என் தலையைப் போல் உன் தலையும் வழுக்கையான பிறகு உன்னை யாராவது கேலி செய்தால் எப்படி இருக்கும் உன் மனம் என்பதை அப்பொழுதுதான் நீ உணர்வாய். இனி மேலாவது பிறர் மனம் நோகும்படி நடக்காதே. எதுவும் தனக்கு வந்தால் தான் தெரியும்'' என்று சொல்லிவிட்டு அவர் வேகமாகச் சென்றுவிட்டார்.

தனக்கு வந்தால் தெரியும்...

பொன்மலை பரிமளம்

சென்று கொண்டிருந்தவர் திடீரென்று திரும்பி, ''தம்பி! பாலைவனம் என் தலையைப் போல் பளபளவென்று வழுக்கையாக இருக்காது தெரியுமா? நீ உன் நண்பர்களிடம் என் தலையைப் பற்றி விமர்சனம் செய்ததெல்லாம் என் காதில் நன்றாக விழுந்தது. சொல்லக் கூடிய உதாரணத்தைப் பொருத்தமாகச் சொல்லக் கற்றுக்கொள்'' என்றார்.

''நான் ... வந்து ... உங்களை ...'' என்று தடுமாறினான் சேகர்.

''முதுகுக்குப் பின் வீராவேசமாகப் பேசியவன் முகத்துக்கு நேரே கோழையாகிவிட்டாயே தம்பி! எப்பொழுதும் யோசித்துப் பேசு. புத்திசாலித்தனமாகப் பேசு. பிறர் மனம் புண்படும்படி பேசாதே.''

சேகர் பதில் ஒன்றும் கூற முடியாமல் விழித்தான். அவன்கூட வந்த நண்பர்கள் சேகரைக் குற்றவாளி போல் பார்த்தார்கள். 'இவனுக்கு வேண்டும். எப்பொழுதும் இப்படித்தான். யாரை

அவர் அந்த இடத்தை விட்டு நகர்ந்ததுதான் தாமதம், சேகருடன் வந்த அவன் நண்பர்கள் எடுத்தார்கள் ஓட்டம். சேகர் தனியாக, பயந்தவனாக, மெதுவாக நடந்து கொண்டிருந்தான்.

'நல்லவேளை. அடிக்காமல் விட்டாரே' என்று எண்ணியவனாக அவன் சென்று கொண்டிருக்கும் போது திடீரென்று மழை பொழியத் தொடங்கியது.

மழையில் நனைந்து கொண்டே வீட்டுக்கு வந்த சேகர், வழியில் நடந்த சம்பவத்தை நினைக்கும்பொழுது அவனுக்குப் பயமாகவே இருந்தது.

மழையில் நனைந்த சேகருக்கு மறுநாள் தலை பாரமாக இருந்தது. அத்துடன் ஜுரம் வேறு அடித்தது. ஜுரம் அதிகமாகவே டாக்டரிடம் அவனை அழைத்துச் சென்றார் அவனது அப்பா. டாக்டர் சேகரைப் பரிசோதித்துவிட்டு ''இது டைபாய்ட் ஜுரத்தின் அறிகுறி. ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்

ளுங்கள். ஜுரம் அதிகமாக அடித்தால் தலையில் ஐஸ் கட்டியை அடிக்கடி வைக்க வேண்டும்.'' என்று கூறி மருந்து எழுதிக் கொடுத்தார்.

டாக்டர் சொன்னது போல் சேகர் டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டான். ஒரு மாதம்வரை பள்ளிக்கூடத்துக்குச் செல்லவில்லை. ஜுரத்தின் வேகம் சேகரின் தலைமுடியைப் பாதித்து விட்டது. தினமும் சிறிது சிறிதாகத் தலை முடி கொட்ட ஆரம்பித்தது. தலை முழுவதும் 'சொட்டை சொட்டை'யாக இருந்தது.

சேகரின் பெற்றோர்கள் அவன் தலையில் முடி நன்றாக வளர மொட்டை அடித்துக் கொள்ளும்படி கூறினார்கள். சேகர், ''போம்மா, என் சிநேகிதர்கள் எல்லாம் என்னை மொட்டை மொட்டைன்னு கேலி செய்வாங்க. நான் மாட்டேன்'' என்று பிடிவாதம் பிடித்தான்.


பள்ளிக்குச் சென்ற சேகரை அவன் நண்பர்கள், ''டேய், சொட்டைத் தலையா... சொட்டை... சொட்டை!'' என்று கேலி செய்தார்கள்.

ஒருசில நண்பர்கள் ''டேய் சேகர், உன் தலை பார்க் போல் இருக்குதுடா. யாருடா இப்படித் திட்டுத் திட்டா, அழகா வெட்டிவிட்டது?'' என்று கிண்டல் செய்தார்கள். இன்னும் சிலரோ ''இது பூங்கா இல்லேடா. ராத்திரி கரையான் புற்றுக்குப் பக்கத்திலே படுத்திருப்பான். அது இவன் தலையை இப்படி அரிச்சிடுத்து'' என்றார்கள்.

நண்பர்களின் கேலியும் கிண்டலும் அவன் கண்களில் நீரை வரவழைத்தன. ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தான். பெற்றோர்கள் சொல் கேட்காதது எவ்வளவு தவறு என்று நினைத்தான். அன்று வழுக்கைத் தலைக்காரரைக் கேலி செய்ததை நினைத்து மிகவும் வருந்தினான். நாம் கேலி செய்வதால் பிறர் மனம் எப்படிப் புண்படும் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தான்.

''இனிமேல் யாரையும் மனம் புண்படும்படி பேச மாட்டேன். எல்லோருக்கும் நல்லவனாகவே நடப்பேன். இது உறுதி'' என்று மனத்துக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

சேகர் அவன் பெற்றோர்கள் சொன்னபடி மொட்டை அடித்துக் கொண்டதால் அவன் தலை முடி 'கருகரு' என்று வளர்ந்தது. இப்போது அவன் யாரையும் மனம் நோகும்படி பேசுவதேயில்லை.




மன உறுதி

1899ம் வருடம் லண்டன் மாநகரத்தின் வீதி வழியே போயர் யுத்தத்துக்குச் செல்லும் ராணுவ வீரர்கள் அணி அணியாகச் செல்கிறார்கள். வழி நெடுக மக்கள் கூட்டம் அவர்களுக்கு வாழ்த்துக்கள் கூறி வழி அனுப்பி வைக்கிறது. அந்தக் கூட்டத்தில் நின்று கொண்டிருந்த பன்னிரண்டு வயதுச் சிறுவன் ராணுவ வீரர்கள் செல்லும் அழகைக் கண்டு அதே போல் தானும் செல்ல வேண்டும் என்று நினைத்தான். அவன் தாய் சொன்ன வீரக் கதைகள் அவனுக்கு நினைவுக்கு வருகின்றன. தன் தாத்தா பஞ்சாப்பில் லெப்டினன்ட் ஜெனரலாகப் பதவி வகித்துப் பல பரிசுகள் வாங்கியது அவன் மனக் கண் முன்னால் தோன்றுகிறது. ''நானும் இதே போல் ஒருநாள் இந்த லண்டன்



வீதி வழியே என் படைகளுக்குத் தலைமை வகித்து அழைத்துச் செல்வேன்'' என்று உறுதி செய்து கொண்டான்.

வருடங்கள் பல உருண்டு ஓடின. இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஆப்பிரிக்காவில் அல் அலமீனிலிருந்து ட்யூனிஷியா வரையிலும் ஜெர்மானியப் படைவீரர்களைப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்தபின், மேற்குப் போர் முனையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் படையின் சேனாதிபதியாகத் தலைமை வகித்து வெற்றி முழக்கத்துடன் பெர்லினுக்குள் நுழைந்தான், ஃபீல்ட் மார்ஷல் பெர்னார்டு மான்ட்கோமரி. அவனுக்கு லண்டன் நகர மக்கள் மாபெரும் பாராட்டு விழா நடத்திக் கௌரவித்தார்கள். பரிசுகள் பல வழங்கினார்கள்.



பன்னிரண்டு

விடா முயற்சி

முதன் முதலில் பனியால் சூழப்பட்ட வடதுருவப் பிரதேசத்தின் மீது விமானத்தில் பறந்து பார்த்தவர் **ரிச்சர்ட் எவலின் பயர்ட்** என்பவர். வட துருவத்தை அடைவதற்காக அட்மிரல் பியரி என்பவர் நடத்திய போராட்டங்களை ரிச்சர்ட் சிறு வயதில் அறிந்திருக்கிறார். அப்போதே, ''வட துருவத்தை விமான மூலம் அடையும் முதல் மனிதனாக நான் இருக்க வேண்டும்'' என்று



தன்னம்பிக்கை

நடு இரவு. சிறுவன் படுத்திருந்த அறையிலிருந்து பெரும் சத்தம் கேட்டு விழித்தாள் தாய். மகன் தூங்கிக் கொண்டிருக்கும் அறைக்கு ஓடினாள். கதவைத் திறந்தாள். உள்ளே, நின்று கொண்டிருந்த தன் செல்வனை நோக்கி, ''மகனே! ஏன் இப்படி உரக்கச் சத்தம் போட்டுக் கத்துகிறாய்? எதையாவது கண்டு பயந்துவிட்டாயா?'' என்றாள். உடனே அந்தச் சிறுவன் சொன்னான்: ''அம்மா, நான் வருங்காலத்தில் நம் நாட்டின் தலைவனாகப் போகிறேன்.... அதற்காக இப்பொழுதே ஒத்திகை பார்த்துக் கொள்கிறேன். தலைவனுக்குச் சொற்பொழிவாற்றத் தனித்திறமை வேண்டாமா? அதற்காகத்தான் இப்படிப் பேசிப் பழகிக் கொண்டிருக்கிறேன்!'' என்றான். அந்தச் சிறுவனுக்கு அப்பொழுது வயது பன்னிரண்டு. சிறு வயதிலேயே 'நான் தலைவனாவேன்' என்ற தன்னம்பிக்கையுடன் தன் லட்சியத்தை நிறைவேற்றிய அந்தச் சிறுவன் யார் தெரியுமா?

அவர்தான் உலகச் சரித்திரத்திலே இடம் பெற்ற **சர்வாதிகாரி முசோலினி!**

பயதில்......



தீர்மானித்தார். அப்பொழுது அவருக்கு வயது பன்னிரண்டு. வட துருவத்தைக் கண்டு பிடிப்பதற்காக அவர் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டு இரவும் பகலும் பாடுபட்டார். அவரது விடா முயற்சி இறுதியில் வெற்றியை அளித்தது. அவர் நினைத்ததுபோல் வட துருவத்தின் மீது மட்டும் அல்லாமல் தென் துருவத்தின் மீதும் பறந்து சென்றார். இரு துருவங்களிலும் முதன் முதலில் பறந்த முதல் மனிதர் ரிச்சர்ட் எவலின் பயர்ட் ஆவார்.

இரக்கம்

கிழிந்த ஆடைகள் அணிந்த பிச்சைக்காரன் ஒரு வீட்டு வாசல் முன்னால் நின்று பிச்சை கேட்டுச் சத்தம் போட்டான். அந்த வீட்டிலிருந்து வெளியே வந்த சிறுவன், ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான். அந்தப் பிச்சைக்காரன், ''தம்பி, என் உடைகள் கிழிந்திருக்கின்றன. இரவில் குளிர் தாங்க முடியவில்லை. நீ அணிந்திருக்கும் சட்டையைக் கொடுத்தாலே போதும். அது எனக்குச் சரியாக இருக்கும் என்று நம்புகிறேன்'' என்றான். பிச்சைக்காரன் மீது இரக்கப்பட்ட அந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவன், தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றிக் கொடுத்து விட்டான். பிச்சைக்காரன் மீது இரக்கப் பட்டுத் தன் சட்டையைக் கழற்றிக் கொடுத்த அச்சிறுவன் வேறு யாரும் அல்ல. அவர்தான் **விவேகானந்தர்!**


— பொன்மலை பரிமளம்

பன்மொழிப் புலவர்!

நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு.

சித்தூரை அடுத்த ஒரு சிறிய கிராமத்தில் ரங்கநாதன் என்ற ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய தந்தை மிகவும் ஏழை. அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிரிட்டு, அதிலிருந்து கிடைக்கும் சொற்ப வரும்படியில் அவர்கள் காலம் தள்ளி வந்தனர்.

ஒரு முறை பருவ மழை தவறிப் பயிர்கள் கருகிவிட்டபடியால் ரங்கனுடைய தந்தையால் தீர்வை கட்ட முடியவில்லை. அதற்காக அவருக்கு, அரசாங்கம் சிறைத் தண்டனை விதித்தது.



அவர் சிறையில் இருக்கும்போது ரங்கனுடைய தாத்தாவுக்குத் திவசம் செய்ய வேண்டிய நாள் வந்தது. அவரோ சிறையில் இருக்கிறார். ரங்கனுடைய தாய் என்ன செய்வது என்று தெரியாமல் அழுது கொண்டிருந்தாள்.

தாய் அழுவதைக் கண்ட ரங்கனால் வேதனை பொறுக்க முடியவில்லை. தாயிடம் காரணம் கேட்டான். காரணம் தெரிந்ததும் அவன், தாயின் துயர் துடைக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான்.

ரங்கநாதனுக்கு அப்போது வயது பன்னிரண்டு மட்டுமே. அந்தச் சிறு வயதிலும் அவன் தனியே ஐந்து மைல்கள் நடந்து சித்தூரை அடைந்தான். அங்கு நீதிபதியாக இருந்த காஸா மேஜர் என்ற வெள்ளைக்கார துரையைச் சந்தித்தான்.

அவரிடம் ரங்கன் முறையிட்டு அழுதான். அவர், 'தகுந்த ஜாமீன் இல்லாமல் தந்தையை விடுவதற்கு இயலாது' என்று கூறிவிட்டார். ரங்கன் ஜாமீன் கொடுப்பதற்குப் பணத்துக்கு எங்கு போவான்?

''ஐயா! என் தந்தைக்கு ஜாமீன் கொடுப்பதற்கு எங்களிடம் பணம் கிடையாது. ஊர்ப் பெரிய மனிதர்கள் ஏழைகளுக்கு இரங்குவதில்லை. தயவு செய்து என் தந்தைக்குப் பதிலாக என்னைச் சிறையில் அடைத்துவிட்டு, அவரை ஒரு நாளைக்கு மட்டும் வெளியே விடுங்கள்'' என்று கேட்டுக்கொண்டான்.

சிறுவனின் வார்த்தைகளைக் கேட்ட காஸா மேஜரின் மனம் இளகியது. சிறுவனை அவர் புகழ்ந்து தட்டிக் கொடுத்தார். அதோடு மட்டும் நிறுத்திவிடாமல், தீர்வை பாக்கியை ரத்து செய்துவிட்டு அவனுடைய தந்தையையும் விடுவிக்கும்படி கட்டளை பிறப்பித்துக் கடிதம் எழுதி, அதை ரங்கநாதனிடமே கொடுத்தார்.

ரங்கநாதன் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு சிறையைநோக்கி ஓடினான். அவன் தந்தை விடுவிக்கப்பட்டார்.

இருவரும் மீண்டும் நடந்து வீடு வந்து சேர்ந்தபோது நடு இரவு கடந்துவிட்டது. அவன் தாய் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

தாயும் தந்தையும் பெருமையோடு அவனைத் தடவிக் கொடுக்க, ரங்கன் தன் கால் வலியையும் மறந்து அயர்ந்து உறங்கினான்.

பிற்காலத்தில் அந்தச் சிறுவன்தான் 'ஸ்மால் காஸ் கோர்ட்டு' என்னும் நீதிச் சபையில் முதல் நீதிபதியாகப் பதவி வகித்த இந்தியர், **சி. வி. ரங்காநாத சாஸ்திரி**யாக வளர்ந்தான். பதினான்கு பாஷைகளுக்கும் அதிகமாகக் கற்றறிந்திருந்த அந்த மேதை எல்லோர் மதிப்புக்கும் உரியவராயிருந்தார். — கைலாஷ்

ஒப்பந்தச் சீட்டு

''தந்தைக்கு மகன் எழுதிக் கொடுத்த ஒப்பந்தம்:- நான் திருடினாலும் சரி, பேச்சுத் தவறி நடந்தாலும் சரி, இல்லை பொய் சொன்னாலோ, வஞ்சித்தாலோ, யாரிடத்திலும் லஞ்சம் வாங்கினாலோ, அல்லது ரகசியமாய் சதிச் செயல் புரிந்தாலோ, என் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவதற்கும் அல்லது செய்த குற்றத்துக்குத் தகுந்த தண்டனை தருவதற்கும் நான் ஒப்புக் கொள்கிறேன்.''

இதை யார் எழுதிக் கொடுத்தது? ஹைதர் அலிக்குத் திப்பு சுல்தான் எழுதிக் கொடுத்த ஒப்பந்தச் சீட்டாகும்.

ஆதாரம்: 'இந்தியன் ஹிஸ்டரி' தகவல்: — போத்தனூர் சாரதி



பயமுறுத்தாத பாண்டா கரடி!

கரடியை மிருகக் காட்சிசாலையில் பார்த்திருக்கிறோம். பார்க்கும்போது பயம் ஏற்படுகிறது. பயம் இல்லாமல் பார்க்கக் கூடிய கரடியும் இருக்கிறது. அதுதான் பாண்டா கரடி.

கறுப்பும் வெள்ளையுமாக கொழு கொழு என்று இருக்கும். மூங்கில் இலையும், மிருதுவான இலை தழைகளும் பாண்டாவுக்கு மிகவும் பிடிக்கும். சாதுவான பிராணி.

பாண்டா கரடியைப் பார்க்க ஆசையாக இருக்கிறது. அல்லவா? நம் நாட்டில் மட்டுமல்ல வேறு எந்த நாட்டிலும் பாண்டா கரடியைக் காண முடியாது. சீனாவில் மட்டுமே இவை இருக்கின்றன. சீனாவிலிருந்து ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஆகிய நாடுகளுக்குப் பாண்டா அனுப்பப்பட்டு மிருகக் காட்சி சாலைகளில் இருந்து வருகின்றன. சீனாவைத் தவிர மற்ற நாடுகளின் சீதோஷ்ண நிலை இதற்கு ஒத்துக் கொள்ளாததால் பாண்டா கரடிகள் பெருகவில்லை.

சீனா, பாண்டா கரடியை முதன் முதலாக இந்தியாவுக்குத்தான் கொடுத்தது. ஜவாஹர்லால் நேருஜி 1950ம் வருட வாக்கில் சீனாவுக்குச் சென்றபோது சீனா ஒரு பாண்டா கரடியை அளித்தது. சீதோஷ்ண நிலை ஒத்துக் கொள்ளாததால் சிறிது காலத்துக்குப் பிறகு அந்த பாண்டா கரடி செத்துப் போய்விட்டது. பிறகு ரஷ்யாவுக்கு ஒரு பாண்டாவை சீனா கொடுத்தது. அதன் பெயர் ஆன்—ஆன். சீ—சீ என்ற பாண்டாவை இங்கிலாந்து வாங்கிக் கொண்டது. சில வருடங்களுக்கு முன் ஆன்—ஆனும், சீ—சீயும் இறந்துவிட்டன.

இப்பொழுது பிரபலமாக விளங்கும் பாண்டா கரடிகள் நான்கு. லிங்—லிங், ஷிங்—ஷிங், காங்—காங், லான்—லான் ஆகியவையே அவை.

லிங்—லிங்கும், ஷிங்—ஷிங்கும் அமெரிக்காவில் இருக்கின்றன.

ஜப்பானில் லான்—லானும், காங்—காங்கும் மிருகக் காட்சி சாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவையும் சீனா கொடுத்தவையே. ஜப்பானுக்கு பாண்டா கரடிகள் வந்த புதிதில் மிருகக் காட்சி சாலைகளில் எப்பொழுதும் கூட்டம் இருந்த வண்ணமாக இருந்ததாம். பாண்டா கரடிகளைப் பார்க்கும் ஆசை மக்களுக்கு அதிகரித்ததால், பாண்டா கரடியைப் போல் ஆயிரக் கணக்கில் பொம்மைகள் செய்து ஜப்பானில் விற்க ஆரம்பித்தார்கள்.

பாண்டா கரடி சீனாவில் மட்டுமே பிறந்து வளர்ந்து கொண்டிருப்பதால் இதன் உருவத்தைத் தபால் தலைகளில் சீனா வெளியிட்டிருக்கிறது. —ஜானு

முட்டாள் முதலை!

ஒரு காட்டின் நடுவே ஒரு காட்டாறு ஓடியது. அதில் ஒரு முதலை வசித்து வந்தது. ஆற்றின் கரை ஓரத்தில் ஒரு பாறையினடியில் ஒரு பெரிய நண்டும் வாழ்ந்து வந்தது. முதலையும் நண்டும் தோழர்களாக இருந்தன. ஆற்றங் கரைக்கு வரும் பிராணிகளைக் கௌவி இழுத்துக் கொண்டு ஆற்றுக்குள் போய் விடும் முதலை. இதனால் அந்தப் பகுதிக்கு மிருகங்கள் வருவது வரவரக் குறைந்து போயிற்று. முதலைக்குப் பசிக்காதா? பட்டினியினால் பரிதவித்த முதலை தன் நண்பனான நண்டிடம் ''தோழா, என்னால் பசியைத் தாங்க முடியவில்லை. எந்தப் பிராணியும் இந்தப் பக்கம் வருவதுமில்லை. தயவு செய்து நீ எனக்காக ஓர் உதவி செய். ஒரு நரியைத் தண்ணீர் குடிக்க இங்கு அழைத்து வா. நான் அதை என் ஆகாரமாக்கிக்கொள்கிறேன்'' என்றது.

நண்டு தன் நண்பனின் யோசனைக்கு இணங்கிச் செயல்படவில்லை.

''நண்பனே, ஏன் பேசாமலிருக்கிறாய் இந்த உதவியைக்கூட நீ எனக்குச் செய்யக் கூடாதா ?'' என்று கேட்டது முதலை.

''நரிக்கு உன் குணம் நன்றாகத் தெரியும். நான் கூப்பிட்டால் அது வருமா?'' என்றது நண்டு.

ஆற்றை அடுத்து ஒரு பெரிய மரம் இருந்தது. அது கல்யாண முருங்கை மரம். அந்த மரம் முழுவதும் செவேல் என்று பூக்கள் பூத்துக் குலுங்கின. தரையெல்லாம் பூக்கள் ஏராளமாக உதிர்ந்து கிடந்தன. இதைக் கண்ட முதலைக்கு ஒரு யோசனை தோன்றியது.

''நண்பனே! நான் ஆற்றிலிருந்து வெளியே வந்து கரையில் செத்துப் போனது போல் அசையாமல் கிடக்கிறேன். என் மீது இந்தப் பூக்களையெல்லாம் போட்டு மூடிவை. அதன் பிறகு நீ நரியை நீர் அருந்த இங்கு அழைத்து வா'' என்றது நண்டினிடம்.

நண்டுக்கும் இது நல்ல யோசனையாகப் படவே சம்மதித்தது. முதலை மரத்தடிக்கு நகர்ந்து வந்து முடங்கிக் கொண்டது. நண்டு கீழிருந்த மலர்களையெல்லாம் எடுத்து முதலையின் மீது வைத்து மூடியது. பிறகு நரியைச் சந்திக்கக் காட்டுக்குள் சென்றது.

''எதற்காக நான் உன்னோடு ஆற்றுக்கு வரவேண்டும்?'' என்று கேட்டது தந்திரக்கார நரி.

''நீ ரொம்ப நாளாகத் தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கிறாயே என்று தான் வந்து கூப்பிட்டேன்'' என்று கூறியது நண்டு.

''உண்மைதான். வயிறார நல்ல தண்ணீர் குடித்து எத்தனை நாட்கள் ஆயின. அது சரி, அங்கே இருக்குமே முதலை, அது என்ன ஆயிற்று?''


''அதை நினைத்துத்தான் நீ பயப்படுகிறாயா? அது செத்துப் போய்விட்டது. மரத்தடியில் விறைத்துப் போய்க் கிடக்கிறது. அது என் நண்பனாயிற்றே. என் மரியாதையைத் தெரிவிக்க அதன் உடலை மலர்களால் மூடிவிட்டு வந்திருக்கிறேன்'' என்றது நண்டு. நரியும் நண்டு சொல்வது உண்மைதானா என்பதைக் காணக் கிளம்பியது. ஆற்றங் கரைக்கு வந்த நண்டு தூரத்தில் மலர்களால் மூடப்பட்டு மரத்தடியில் முதலை கிடப்பதைக் கண்டது. நரியாயிற்றே. அத்தனை இலகுவில் அதற்கு நம்பிக்கை பிறக்குமா?


''நண்டாரே! இதென்ன விசித்திரமாக இருக்கிறதே. முதலைகள் இறந்து விட்டால் அவற்றின் வால் மட்டும் இப்படியும் அப்படியும் அசைந்தபடி துடிக்கும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் உன் நண்பனான முதலையின் வால் ஆடாமல் அசையாமல் இருக்கிறதே. உண்மையில் அது செத்துப் போயிருக்கிறதா அல்லது....''

கண் மூடிப் படுத்திருந்த பைத்தியக்கார முதலை கைக்கு வந்த உணவு வாய்க்கு எட்டாமல் போய்விடப் போகிறதே என்று வேக வேகமாகத் தனது வாலை மேலும் கீழுமாக ஆட்டியது! அவ்வளவுதான். அதன் பிறகுமா நரி அங்கு நின்று கொண்டிருக்கும்?

''நண்டாரே! என்னை ஏமாற்றி, உமது நண்பனுக்குப் படையல் வைக்கப் பார்க்கிறீரா?'' என்று சொல்லிக் கொண்டே காட்டுக்குள் ஓடி மறைந்தது குள்ள நரி.

— கிட்டு





சிஷ்யன்: குருவே! நமது உண்டியல் திருடு போயிடுச்சு என்கிறேன், தாங்கள் சிரிக்கிறீர்களே?"

குரு: சிஷ்யா! பணத்தாசை யாருக்கும் இருக்கக் கூடாது என்று நான் நினைப்பதால் அந்தப் பணத்தை நானே என் மடியில் வைத்திருக்கிறேன். உண்டியல் போனால் போகிறது.

- போத்தனூர் சாரதி.




(நோட்டீஸ் ஒட்டுபவன்) "பின்னே என்னங்க? செஞ்ச வேலைக்குச் சரியாக் கூலி கொடுக்க மாட்டேங்கறாங்களே! அதனாலே தான் இப்படி."

சிரிக்கச் சிரிக்க



"ஷார்ட் வாங்கணும். பத்து ரூபாய் ஷார்ட்டா இருக்கு."

"நானே ஷார்ட்.. என்னைக் கேக்கறீங்களே!"



"அட, அசடே! கீழே இருந்து மேலே பெயிண்ட் அடிச்சிண்டு போயிட்டே, காயறதுக்கு நாலு நாட்களாகும். எப்படிச் சாப்பாட்டுக்கு இறங்குவே?"



"காரைத் திருப்பணும். பின்னுலே ஏதா இருக்கா பார்."

"ஒரு தடங்கலும் இல்லே; ஒரே வெட்ட வெளி."



உங்களுக்கெல்லாம் ரொம்ப ரொம்பப் பிரியமான ஒரு பொருள் உண்டென்றால் அது சாக்கலேட் தான். இல்லையா? பேசத் தெரிந்த குழந்தை ஆசையோடு தன் பெற்றோரிடம் முதலில் கேட்பது சாக்கலேட்டைத்தான். குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை விரும்பி வரவேற்கும் இந்தச் சாக்கலேட் தோன்றியது எப்படி?

1520ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த வீரரும், மாலுமியும், கண்டுபிடிப்பாளருமான ஹெர்னண்டோ கார்டஸ் என்பவர் மெக்ஸிகோ நாட்டை வெற்றி கொண்டபோது அங்கு வாழ்ந்தவர்கள் ஆஸ்டெக் *(Aztec)* என்ற இனத்தவர். இவர்களின் மன்னர் மாண்டே ஸுமா *(Montezuma)* இந்த மாபெரும் இனத்தவரை வெற்றி கொண்டதையும் விட அவர்கள் தயாரித்துக் கொடுத்ததோர் பானத்தைக் குடித்தபோதுதான் பெரு மகிழ்ச்சி அடைந்தார் கார்டஸ். ஆஸ்டெக் இனத்தவர்கள் தங்கள் கடவுளுக்கென உணவாக இந்தப் பானத்தைத் தயாரித்து வழங்கி வந்தனர். கோ கோ என்ற மரத்திலிருந்து கிடைக்கும் விதைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது அந்தச் சுவை மிக்க பானம் என்பதை அறிந்தார்கள் ஸ்பானிஷ்காரர்கள். தென் அமெரிக்காவில் மட்டுமே பயிரான கோகோ மரங்கள் இன்று உலகின் பல பகுதிகளிலும் பயிர் செய்யப்படுகிறது. ஆஸ்டெக் இந்தியர்கள் கோ கோ விதைகளை நாணயங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் அதன் மதிப்பு எத்தகையது என்பதைச் சொல்லவா வேண்டும்!

கோ கோ விதையிலிருந்து தயாரிக்கப்படும் பானத்துக்கு கோகோ பானம் என்றும் சுவை மிக்க உணவுக்கு சாக்கலேட் என்றும் குறிப்பிடுகிறோம்.

இன்று கோகோ மரங்கள் பயிராகும் பிரதேசங்கள் மேற்கு ஆப்பிரிக்கா, சிலோன், மார்ட்டினி, பிலிப்பைன்ஸ், ஸோண்டா தீவுகள், ஜமைக்கா, வெனிஸுலா, மெக்ஸிகோ ஆகிய உஷ்ணமண்டலப் பிரதேசங்களாகும். பூமத்திய ரேகையை அடுத்து 20 டிகிரி தெற்கு வடக்குப் பிரதேசங்களிலெல்லாம் கோகோ பயிராவதற்கு ஏற்ற இடங்களாகும்.


கார்டஸ், மெக்ஸிகோ நாட்டின் ஆஸ்டெக் இனத்தவரின் தோட்டங்களில் இந்த அழகு மரங்கள் அடர்ந்து செழித்துப் பசேல் என்று வளர்ந்திருப்பதையும் அதன் கிளைகளிலும் அடி மரத்திலும் சிவந்த மஞ்சள் நிறத்தில் சிறு பூசணிகளைப் போல் பழங்கள் காய்த்துத் தொங்குவதையும் கண்டு வியந்தார். அவை கோ கோ பழங்கள் என்றும், அவற்றின் விதையிலிருந்துதான் அரசர் அருந்தும் அந்த அற்புதப் பானம் தயாரிக்கப்படுகிறது என்பதையும் அறிந்தார். சுதேசிகள் அதன் முறையை அவருக்கு விளக்கினார்கள். பழங்களைப் பறித்து அதைக் கீறி அதனுள்ளிருக்கும் விதைகளை எடுத்து வெயிலில் உலர்த்துவார்கள். நன்கு காய்ந்ததும் விதைகளின் மேலுள்ள ஓட்டை உடைத்து நீக்குவார்கள். உள்ளிருக்கும் பருப்பைச் சீரான சூட்டில் வறுப்பார்கள். பிறகு இதை கோப்பை வடிவப் பாத்திரத்தில் இட்டுப் பொடியாக்குவார்கள், காப்பி டிகாக்ஷன் தயாரிப்பது போல் இந்த கோ கோ பொடி











யோடு கொதிநீரைக் கலந்தால் கசப்பான கஷாயம் கிடைக்கும். ஆஸ்டெக் இந்தியர்கள் ஆதியில் இந்த கோ கோ கஷாயத்துடன் பாலோ சர்க்கரையோ சேர்த்துக் குடிக்கவில்லை. மிளகு முதலிய மசாலா சாமான்களைக் கலந்து குடித்தார்கள். மன்னர் மாண்டேஸுமா மட்டும் கோ கோ டிகாக்ஷனுடன் வனிலா, தேன், அகேப் என்ற தாவரத்தின் இனிப்பான சாறு ஆகியவைகளைக் கலந்து குடித்தார். கொதிநீரை கோ கோ தூளில் ஊற்றியதும் கம்மென்ற மணத்துடன் கருஞ் சிவப்பான ('சிரப்') பானமாகியதைக் கண்ட கார்டஸ் 'உண்மையிலேயே இது ஓர் அரச பானம்தான்' என்று பாராட்டி ஸ்பெயின் மன்னர் ஐந்தாம் சார்லஸுக்கு கொஞ்சம் கோ கோ விதைகளையும் அதைப் பானம் தயாரிக்கும் முறையையும் விவரித்து அனுப்பி வைத்தார். புதிய பானத்தின் ருசி மன்னரையும் மற்றையோரையும் மகிழ வைத்தது. ஆனால் அந்தப் புதிய பானத்துடன் சர்க்கரையைச் சேர்த்தால் சுவை இன்னும் கூடுவதைக் கண்டார்கள். ஸ்பெயின் நாட்டில் காலையில் கொஞ்சம் சாக்கலேட் குடிப்பது பழக்கமாயிற்று. அது இன்றும் கூட இருந்து வருகிறது.

சாக்கலேட்டின் புகழ் மெள்ள மெள்ளப் பரவலாயிற்று. ஆனால் கோ கோ விதைகிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. ஸ்பெயின் மன்னரின் ஏகபோக உரிமையாக இருந்த இந்த கோ கோ விதைகளை அவர் தம் நண்பர்களான அரசர்களுக்கு மட்டுமே அளித்தார். அவ்வப்போது போப்பாண்டவரைச் சந்திக்கப்போகும் வேளைகளில் அவருக்கும் கோகோ விதைகளைக் காணிக்கையாக்கினர். புதிய பானத்தை அருந்தி மகிழ்ந்த போப்பாண்டவர் கத்தோலிக்கர்கள் இதை அருந்துவதில் தவறில்லை என்று அறிவித்தார். காப்பியும் டீயும் அப்போது யாருக்குமே தெரியாத ஒன்று. முதன் முதலில் ஐரோப்பியர்களுக்கு அறிமுகமான அந்நியப் பானம் இந்த கோகோதான்.

கோகோ விளைய 21லிருந்து 38 டிகிரி சென்டிகிரேட் உஷ்ண நிலை ஆண்டு முழுவதுக்குமாகவும் நல்ல மழையும் வேண்டும். இத்தகைய பருவ நிலை கொண்ட வெனிஸுலா, ஈக்வடார், மேற்கிந்தியத் தீவுகள், தெற்கு மெக்ஸிகோ இங்கெல்லாம் இம்மரம் இயற்கையாகவே ஏராளமாக வளர்ந்திருந்தன. ஐரோப்பாவின் அரசுகள் தங்களது காலனி ஆதிக்கம் உள்ள இந்தோனேஷியா, ஆப்பிரிக்கா இங்கெல்லாம் இந்தத் தாவரத்தைப் புகுத்தினார்கள். கடல் மட்டத்துக்கு அதிக உயரமில்லாத பகுதியாகவும், செழுமை மிக்க பூமியும், நிறைய நிழலும் இதற்குத் தேவை.

மேற்கு ஆப்பிரிக்கா கோ கோ மரங்கள் செழித்து வளர ஏற்ற பிரதேசமாக இருந்தது. இன்றைய கானா நாடு மிக மிக ஏற்றதாக அமைந்தது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு கானாவில் (அன்றைய கோல்டு கோஸ்ட்) ஒரு கோ கோ மரங்கூடக் கிடையாது.





1891ல் கோகோ அங்கு குடியேறியது. 1930ல் கானா நாட்டிலிருந்து 287000 டன்கள் கோகோவை ஏற்றுமதியானது. அந்த நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களில் மூன்றில் ஒரு பங்கு கோகோதான். தென் அமெரிக்காவை விட இங்கு விளைச்சல் அதிகம். ஆனால் குணமும் மணமும் கொண்ட கோகோ வருவதென்னவோ தாயகமான தென் அமெரிக்காவிலிருந்துதான்.

கோகோ மரம் எட்டு வருஷங்களில் பலன் தர ஆரம்பிக்கும். இளங் கன்றுகளாக இருக்கும்போது இதற்கு நல்ல நிழல் வேண்டும். ஆகவே கன்றுகளை வாழை அல்லது நிறைய இலைகளோடு கூடிய தாவரங்களின் அருகே பயிராக்குவார்கள் - சூரிய வெப்பம் காற்று இவைகளிடமிருந்து காப்பதற்காக. நன்கு வளர்ந்த கோகோ மரத்தின் அருகிலும் சில வேளைகளில் சிறுகன்றுகளைப் பயிராக்குவதுண்டு. இளங் கன்று வளர்ந்ததும் பெரிய மரத்தை வெட்டிவிடுவார்கள்.

இரண்டு மூன்று வயதாகும்போது மரங்களின் உயரத்தைக் குறைக்க வெட்டிவிடுவார்கள். இது பிரதான கிளைகளுக்குப் பலத்தைத் தரும். நெடுநெடு என்று வளர்வதைத் தடுப்பதினால் மரம் ஏராளமாகப் பலன் தரவும், சுலபமாக அதை அறுவடை செய்யவும் முடிகிறது. இருபதடிக்கு மேல் இம்மரங்களை வளர விடுவதில்லை. இப்படி அதன் வளர்ச்சிக்குத் தடை விதிக்காவிடில் இது நாற்பதடி வரை வளரக் கூடியது. ஐந்தாவது ஆண்டில் பழங்கள் தோன்றிப் பலன் தர ஆரம்பிக்கும். பத்தாவது வயதில் மரம் முழுப்பலனையும் கொடுக்க ஆரம்பிக்கும். ஊதா, வெள்ளை நிறப் பூக்கள் தோன்றும். பூக்களெல்லாமே காயாக மாறாது. சில பூக்களே கருக் கொள்ளுகின்றன. ஒரு அப. நீளமும் நான்கு அங்குல அகலமும் உள்ள பழங்கள் கிடைக்கும். ஆண்டுக்கு இரு முறை மகசூல் தரக் கூடியது இம்மரம்.

பழங்களைப் பறித்தானதும் உடனே அகன்ற கத்தியினால் அதைப் பிளந்து விதைகளை எடுத்து விடுவார்கள். இந்த விதைகளை இதற்கென உள்ள பாத்திரத்தில் பத்துத் தினங்களுக்கு மேல் வைத்திருப்பார்கள். மெக்ஸிகோவில் மண்ணினால் ஆன ஜாடிகளை இதற்காக இன்றும் உபயோகிக்கிறார்கள்.

இதன் பிறகு விதைகளைச் சில நாள் வெயிலிலோ அல்லது பிரத்தியேகமான சூடேற்றப்பட்ட அறைகளிலோ வைத்துக் காய வைப்பார்கள். காய்ந்த பிறகு கோ கோ விதையின் ஓடுகள் அப்புறப்படுத்தப் படுகின்றன. கோகோ பருப்புக்களைச் சாக்கில் கட்டி எடை போட்டு வியாபாரத்துக்கு அனுப்பப் படுகின்றன.

கோ கோ அல்லது சாக்கலேட் தயாரிப்பது ஆதிகால முறையிலிருந்து இன்றைக்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்று. கோ கோ பருப்பு தொழிற்சாலைக்கு வந்ததும் முதலில் அவை நன்கு கழுவப்படுகின்றன. அசுத்தங்கள் அகற்றப்பட்ட பின் தரம் பிரித்தானதும் 150 டிகிரி ஸெண்டிகிரேடில் பக்குவமாக வறுக்கப்படுகிறது. சூடாக இருக்கும்போதே இவை ஒரு யந்திரத்தின் மூலம் செலுத்தப்பட்டு உடைக்கப்படுகின்றன. மெல்லிய மேல் தோல் மற்றும் தங்கிவிட்ட ஓடுகள் எல்லாம் விசேஷமானதோர் யந்திரத்தின் மூலம் அகற்றப்படுகின்றன. நிப்ஸ் என்ற கோகோ தூளை மறுபடியும் தரம் பிரிக்கிறார்கள். கோ கோ தொடர்புடைய பண்டங்கள் இன்னின்னதற்கு இன்னின்ன நிப்ஸ்கள் (துண்டு) என்று தயாரிப்பாளருக்குத் தெரியும். அதன்படி அவைகளை அங்கங்கே அனுப்புவார்கள்.

அடுத்த கட்டம் சாக்கலேட் எஸ்ஸென்ஸ் (சாறு) தயாரிப்பது. இதைக் கோ கோ வெண்ணெய் என்பார்கள். நிப்ஸ் என்ற கோகோ பருப்புத் துண்டுகளை ஒரு பாத்திரத்தில் இட்டுச் சூடாக்குவார்கள். அப்போது கோகோ வெண்ணெய் உருகி சாக்கலேட் சாறாக ஓடி அச்சுக்களில் போய்க் குளிரும்போது கருஞ் சிவப்பான கட்டிகளாகும். (இதுவே கோகோ லிக்கர் எனப்படும்.) நீங்கள் சுவைத்துண்ணும் சாக்கலேட்டின் மூலப் பொருள் இதுதான். சம அளவான சாக்கலேட்டு, சர்க்கரை, சுத்தமான கோகோ வெண்ணெயோடு கலந்து தயாரிக்கப்படுவதுதான் சாதாரண சாக்கலேட். சாக்கலேட் லிக்கரை ஹைட்ராலிக் யந்திரத்தின் மூலம் அழுத்திக் கிடைப்பதுதான் கோகோ வெண்ணெய்.

பால் சாக்கலேட்டில் பால் அதிகம். சாக்கலேட் லிக்கர் குறைவு. பானம் தயாரிக்க உதவும் கோகோ தூள் கோ கோ வெண்ணெயின் கசண்டு. தண்ணீரில் கலந்ததும் சுலபமாகக் கரைவதற்கான சில பொருள்களையும் இத்துடன் சேர்க்கிறார்கள். கோ கோ வெண்ணெயில் ஒரு பகுதி மருந்துகள் வாசனைப் பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. இதுதான் கோகோவின் கதை.



பாட்டிக்குச் செல்லம்....!

△

புகைப்படங்கள் :

துரலிங்கம்

▽

பேத்திக்கு செல்லம்....!



வித்தே வித்தே வாருங்கோ,
சித்தே நின்னு பாருங்கோ !





புகைப் படங்கள் :

மேலே : தெரச். ஆதிமூலம்

கீழே : திலிப் பானர்ஜி


அஹிமஹி ராவணர்கள் வருகிறார்கள். ராவணன் அவர்களிடம் தனது வேதனையை வெளியிடுகிறான்.
கவலைப் படாதே, ராவணா! தூக்கப் பொடி தூவி எல்லோரையும் தூங்கச் செய்து ராம லட்சுமணர்களைப் பாதாளலோகத்துக்குக் கொண்டு போய் விடுகிறோம்....
ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
51
அங்கு எங்கள் குல தெய்வமான காளி, நீண்ட காலமாக ரத்த பலி கேட்டு வருகிறாள். இவ் விருவரையும் அவளுக்குப் பலியிட்டு விடுகிறோம்.
அன்றிரவு...
அதோ பார், நம் தூக்கப் பொடி வேலை செய்கிறது. வானரங்கள் மயங்கிச் சரிகின்றன. அதோ, மானிடர்களான ராம லட்சுமணர்களும் கூட...
ஆனால் மாருதி மட்டும் மயங்க வில்லை. எந்த மந்திரமும் அவரிடம் பலிக்காது.
இதென்ன, இப்படி எல்லோரும் மயங்கிச் சுருண்டு கிடக்கிறார்களே? ராட்சஸ மாயையோ? ராம லட்சு மணர்களின் நிலை தெரியவில்லையே!
என் அண்ணலும் அவர் இளவலும் படுத்திருந்த பாறை யையே காணவில்லையே, என்ன மாயம் இது? யார் எங்கே அவர்களைக் கடத்திப் போயிருப்பார்கள்?


அப்போது மரக்கிளையில் இரண்டு பறவைகள் — ராஜாளி — பேசிக் கொண்டிருப்பதைக் கேட்கிறார் ஹனுமார்.
அயி, மயி ராவணன்கள் ராம லட்சுமணர்களைப் பாறையோடு பெயர்த்து எடுத்துக் கொண்டு பாதாள லோகத்துக்குப் போயிருக்கிறார்கள்.
ராம லட்சுமணர்களைக் காளிக்குப் பலியிடப் போகிறார்களாம். அப்போது பறவைகளுக்கும் சிறிது மாமிசம் போடுவார்களாம். நான் போய் அந்தச் சுவையான ஊனை உனக்கும் கொஞ்சம் கொண்டு வருகிறேன்.
ஓ! அப்படியா சமாசாரம்...?
மாருதி பாதாள உலகத்துக்குள் பாய்ந்தார். அங்கே அவரை ஒருவன் தடுத்து நிறுத்துகிறான்.
நில், எங்கே போகிறாய் நீ?
நீ யார் என்னைத் தடுக்க?
இவனது ஸ்பரிசம் எனக்கு இத்தனை இன்பத்தைத் தருகிறதே ஏன்?
இவரது வலிய மேனி என்னைத் தாக்கியபோதும் எனக்கு வலி ஏற்படாமல் ஓர் ஆனந்தமே உண்டாகிறதே ஏன்?
என்னை யாரென்று கேட்டாய்? நான் பாதாள உலகின் காவலன். என் பெயர் மகரத்துவஜன். வீர தீர ஹனுமானின் மகன் நான்.
என்ன... என்ன சொன்னாய்? ஹனுமானின் மகனா? நீயா? எந்தப் பெண்ணையும் கனவிலும் எண்ணாத மாருதிக்குப் பிள்ளையா? சரியான அண்டப் புளுகனாக இருக்கிறாயே!
தொடரும்...

வரலாற்று இலக்கியத்தின் தந்தை

சரித்திரப் பாடம் படிக்கிறீர்கள், இல்லையா? பண்டைய நாகரிகம், மக்களின் வாழ்க்கை, மகோன்னதமாக விளங்கிய சாம்ராஜ்யங்கள், அவை சரிந்த பரிதாபம், மன்னர்கள் நடத்திய போர்கள், அதில் வீரர்கள் நிகழ்த்திய சாகஸங்கள் இப்படி எத்தனையோ சுவையான செய்திகளைக் கூறுகிறது சரித்திரம். இப்படி வாழ்ந்து மறைந்த பண்டைய மக்களின் வரலாறுகளை முதன் முதலில் எழுத ஆரம்பித்தவர் யார் தெரியுமா? ஒரு கிரேக்கர், இவரது பெயர் ஹெரோடோடஸ் (Herodotus) வரலாற்று இலக்கியத்தின் தந்தை என்று இவரை மேல்நாட்டினர் அழைப்பார்கள்.

மத்திய தரைக் கடலில் உள்ள ஒரு துறைமுகத்தை — டையர் அல்லது சிடான் — புராதன கால நிலைக்குக் கற்பனை செய்து பாருங்கள். துறைமுகப் பகுதிகளையொட்டித்தான் அங்காடிகள் இருப்பது வழக்கம். நாவாய்களில் வரும் பொருள்களை அங்கு பரப்பி வைத்திருப்பார்கள், வியாபாரத்துக்கு. அத்தகைய கடைகளில் கிடைக்காத பொருள்களே இருக்காது — மீன், பழங்கள், மது வகைகள், நகைகள் மனிதர்களும் கூட அடிமைகளாக விற்பனைப் பொருள்களாக நிறுத்தப்பட்டிருப்பார்கள். கடைகளைப் பார்த்துக் கொண்டே வேண்டிய பொருள்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

கட்டுமஸ்தான எகிப்தியன், கூட்டத்திலே லெபனீயப் பெண்களை ஒதுக்கித் தள்ளிக் கொண்டு முன்னேறுவான். அராபியச் செல்வந்தனைத் தம் வலைக்குள் விழ வைக்கப் பார்ப்பான் கிரேக்க வியாபாரி.

1500 ஆண்டுகளுக்குமுன் ஒரு வெள்ளிக் கிழமை பிற்பகல். அங்காடிக் கூட்டத்திடையே ஒரு மனிதன் நிதானமாக நடந்து போய்க் கொண்டிருந்தான். அவன் எதையும் வாங்கவில்லை; விற்கவும் இல்லை. அவனது உடையிலிருந்து அவன் ஒரு கிரேக்க நாட்டான் என்பது தெரிந்தது. தோற்றம் உயர் குடிப் பிறப்பு என்பதைக் கூறியது. அடிக்கடி கூட்டத்தினரில் யாரிடமாவது நெருங்குவான். அவரிடம் ஏதோ கேட்பான். பிறகு அவருடன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அருகே உள்ள பானம் அருந்தும் விடுதிக்குள் போவான். கிரேக்க வாலிபன் கடைக்காரரிடம் இருவரும் பருக மது கொண்டு வருமாறு கூறுவான். தான் அழைத்து வந்த மனிதர் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டபடி அமர்ந்திருப்பான் அந்தக் கிரேக்கன், இடையிடையே அவரிடம் வினாக்களை வீசுவான். மற்றபோதெல்லாம் அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருப்பான்.

அவன் கேட்கும் கேள்விகள் சாதாரணமானவையல்ல. ''என்ன சௌக்கியமா?'' என்றோ, ''நாளைக்கு எங்கே போகப் போகிறாய்?'' என்பதாகவோ அந்தக் கிரேக்கனின் வினாக்கள் இருக்காது. ''பாரசீகக் குதிரைப் படைகள் விரட்டியடிக்கப்படுவது உறுதி தானே?'' என்பதாகவோ, ''பாரசீகர்கள் தப்பி ஓடிவிட மார்க்கம் உண்டோ?'' என்றோதான் இருக்கும்.

இந்தக் கிரேக்க இளைஞன்தான் வரலாற்று இலக்கியத்தின் தந்தை என்று புகழ்பெற்ற ஹெரோடோடஸ். 'ஐரோப்பாவின் சரித்திரம்' என்ற புகழ் பெற்ற முதல் சரித்திர இலக்கியத்துக்கான தகவல்களைத்தான் அவர் இம்மாதிரி சேகரித்துக் கொண்டிருந்தார்.

இன்றைக்குச் சரித்திராசிரியர்கள் வரலாற்றுச் செய்திகளைத் தொகுக்க வேண்டுமானால் அவர்களுக்கு உதவியாக அச்சடிக்கப்பட்ட ஏராளமான சாஸனங்களும் செப்பேடுகளும், ஆராய்ச்சிக் குறிப்புகளும் உதவுகின்றன. ஹெரோடோடஸின் காலத்தில் அவருக்கு இந்த வசதிகள் ஏதுமில்லை. தான் தொகுத்த வரலாற்றுச் செய்திகளுக்குச் 'சரித்திரங்கள்' (The Histories) என்று சுருக்கமாகப் பெயரிட்டார். இதற்கு உதவியவை ஆதாரமற்ற பல கதைகளும் எந்தக் கால கட்டங்களில் நிகழ்ந்தவைகளை எழுத ஹெரோடோடஸ் முற்பட்டாரோ அந்தக் காலங்களில் வாழ்ந்தவர்களின் வாய் மூலம் கேட்டறிந்த தகவல்களும்தான்.

சரித்திரங்கள் என்ற தம் நூலின் ஆரம்பத்தில் ஹெரோடோடஸ் இப்படிக் கூறுகிறார் :

'' நான் சேகரித்த தகவல்களைச் சரித்திரமாக்கியுள்ள இந்த நூலில் இரண்டு காரியங்களைக் குறிப்பிடலாம். கடந்த காலத்தை மறந்து விடாதிருக்க வியப்பூட்டும் சாதனைகள் நிகழ்ந்த சம்பவங்களை இதில் எழுதியிருக்கிறேன்.''

துருக்கியின் தென் கடற்கரைப் பகுதியில் ரோட்ஸ் நகருக்குச் சற்று வடக்கே ஹாலி கார்னஸஸ் என்ற நகரில் பிறந்தவர் ஹெரோடோடஸ். இந்த நகரம் கிரேக்கக் காலனியின் தலைநகரம். இவரது தந்தையைப் பற்றிய தகவல் ஏதும் தெரியாவிட்டாலும் அவர் செல்வந்தர் என்பது மட்டும் தெரிகிறது. மரச் சாமான்கள் தயாரித்தும் மது வகைகளை விற்பனை செய்வதிலும் திருப்தியுடன் வாழ்ந்து வந்த தந்தைக்கு மகனாகப் பிறந்த ஹெரோடோடஸ் கிரேக்க நாட்டின் பெருமையையும் அதன் பரம விரோதியான பாரசீகத்தின் கதையையும் மற்றவர்களுக்குச் சொல்லுவதிலேயே ஆர்வம் கொண்டவராக விளங்கினார்.

பல சரித்திர ஆசிரியர்களின்— வர்ணனைகள் சப்பென்றிருக்கும். 'மேலே என்ன நடந்தது?' என்ற ஆர்வம் மிக்க கேள்வியை எழுப்பத் தோன்றாது. ஆனால் ஹெரோடோடஸின் வர்ணனைகள் இதற்கு நேர்மாறானவை. இவர் நிகழ்ச்சிகளைச் சொல்லும் முறை எளிமையாக இருக்கும், குழப்பம் இருக்காது, ஆர்வத்தைத் தூண்டும்விதமாக இருக்கும். சில சம்பவங்கள் நீண்ட கதைகளாக இருக்கும். எந்த நிகழ்ச்சியையும் 'இது தவறு, நடந்திருக்காது' என்று அவர் ஒதுக்கியதில்லை. கேட்ட எல்லாத் தகவல்களையும் தமது குறிப்புகளில் கூறினார். ஆனால் ''இந்தக் கதைகளை, கூற்றுக்களை நான் என் சொந்த அனுபவத்திலிருந்து எழுதவில்லை. உண்மையா என்று உறுதிப்படுத்திக் கொள்ள எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. உங்களுக்கு விருப்பமானால், நீங்கள் நம்புவதானால் ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று வாசகர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்.

தம்முடைய அனுபவங்கள் பரவலாக, பலதரப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதற்காக வீட்டை விட்டுப் பல வருஷங்கள் பல்வேறு இடங்களுக்குப் பிரயாணம் செய்வதிலேயே கழித்தார். தாம் எழுத விரும்பிய சரித்திரத்தோடு தொடர்பு கொண்ட நாடுகளுக்கெல்லாம் சென்றார், சுற்றினார். வரலாற்றுச் சிறப்பு மிக்க பாபிலோன், சூஸா, எக்படான் ஆகிய நகரங்களுக்கெல்லாம் கடல் பிரயாணம் செய்து ஆப்பிரிக்காவுக்குப் போனார். நைல் நதியின் வழியே சென்று எகிப்தின் இதயப் பகுதியை அடைந்தார். டிக்ரிஸ், எபிரேட்ஸ் ஆகிய நதிகளைக் கண்டார். எங்கு போனாலும் சந்திப்பவர்களையெல்



லாம் பல கேள்விகளால் துளைத்தெடுத்து விடுவார். குறிப்புக்கள் எடுத்துக் கொள்வார். சேகரித்த தகவல்களை ஒப்பு நோக்குவார். இவரது நோக்கு — இடங்களைப் பார்த்து எடுத்துள்ள குறிப்புக்களும் வர்ணனையும்—அதிசயிக்கத் தக்கவை. எகிப்தில் இன்றைக்குப் பிரயாணம் செய்யும் ஒருவர், ஹெரோடோடஸ் அன்று தம் குறிப்புக்களில் எழுதியுள்ளபடியே இருப்பதைக் கண்டு வியப்படைவர்.

அவர் காலத்தில் வாழ்ந்த மற்றவர்களைப் போல் அரசியலில் சிக்கி உழலவில்லை ஹெரோடோடஸ். இவரது இளமைப் பருவத்தில் கிரேக்கக் காட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரினால் அதன் அழிவு ஆரம்பமாகி விட்டது. ஸ்பார்ட்டன்களுக்கும் எதினியர்களுக்கும் போர் மூண்டிருந்தது. மற்ற நகரங்கள் கட்சி சேர்ந்து போரிடலாயின.

ஹெரோடோடஸ் தமது சரித் ங்களில் ஏதென்ஸ் நகரைப் பற்றியும் ன் அரசர் பெரிகிள்ஸ் பற்றியும் நல்லவிதமாக எழுதியிருந்தார். ஏதென்ஸ் நகருக்கு வடக்கேயுள்ள தெபன் நகரவாசிகள் இதைச் சுட்டிக் காட்டி எதினியர்களிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு ஹெரோடோடஸ் அவர்களைப் புகழ்ந்து எழுதிவிட்டதாகக் கதை கட்டிவிட்டார்கள். இது உண்மைக்குப் புறம்பானது. இவரது சரித்திரக் குறிப்புக்களின் சிறப்பே அவை விருப்பு வெறுப்பில்லாமல் நடுநிலையிலிருந்து எழுதப்பட்டிருப்பதுதான். இரு தரப்புச் செய்திகளையும் உள்ளது உள்ளபடியே எழுதினர். வாசகர் தம் விருப்பப்படி அதை எடுத்துக் கொள்ள வகை செய்திருந்தார்.

புகழ்பெற்ற இவரது இந்தச் சரித்திரக் குறிப்புக்களைப் புத்தகமாக வெளியிட அந்தக் காலத்தில் வசதிகள் கிடையாது. அது அவ்வளவு சுலபமும் இல்லை. வியாபாரம் நடக்கும் அங்காடிப் பகுதிகளில் பெருங் கூட்டத்தின் முன்னே அத்தியாயம் அத்தியாயமாக உரக்கப் படிப்பார்கள். இதுதான் அக் காலத்திய முறை.

விகேயெம்


☐ ☐ ☐ ☐ ஓ, அப்படியா? ☐ ☐ ☐ ☐

கடற்கரைக்குப் போனர்கள் கிட்டுவும், பட்டுவும். வெண் நுரையாக வந்து மோதிய அலை திரும்பும்போது உருவமே இல்லாத ஏதோ ஒன்று கொழ கொழவென்று கிட்டுவின் கையில் பட்டது. அருவையுடன் அதைக் கடலில் வீசப் போனபோது ஒரு குரல் கேட்டது.

''கிட்டு ஏன் இப்படி முகம் சுளிக்கிறாய்? நானும் மீன் வகையைச் சேர்ந்தவன்தானப்பா! எனக்குப் பச்சடி மீன் (ஜெல்லி ஃபிஷ்) என்று பெயர்'' என்றது.

''பச்சடி மீனா? கண்ணாடி மாதிரி ஒளி ஊடுருவும்படி இருக்கிறாயே?''

''இப்படி இருந்தாலும் நான் உயிருள்ள ஜந்துதானப்பா! நீந்துவேன். ஆகாரம் தேடி அலேவேன். இனப்



பெருக்கமும் எனக்குண்டு. எங்களில் எத்தனையோ வகையினர். சிலர் இத்தனூண்டு இருப்போம். மற்றும் சிலர் ஏழடி குறுக்களவில் நூற்றிருபதடி நீளமுள்ள உணர்ச்சிக் கொம்புகளோடு (டெண்டகிள்ஸ்) காணப்படுவோம்.

''ஆச்சரியமாக இருக்கே!''


''என்னைக் கடல் நீருள்ள ஒரு கண்ணாடி ஜாடியில் போட்டு விட்டுப் பூதக் கண்ணாடி மூலம் நோக்கினால், என் மேலுள்ள சட்டை (மாண்டில்)யிலுள்ள துவாரங்கள் வழியே நான் உட்கொள்ளும் ஆகாரத்தின் கழிவுப் பொருள் வெளிவருவதைக் காணலாம். என்னுடைய வாய் என் உடலின் அடிப் பாகத்திலிருக்கிறது. நீரும் அதிலுள்ள உணவும் இந்த வாயின் வழியே உள்ளே செல்லுவதையும் ஜீரணிக்கப்படுவதையும் நன்றாகக் காணலாம்.


''எங்கள் உணர்ச்சிக் கொம்புகள் நீந்துவதற்கும் சில இனத்தில் இரையைப் பிடிக்கவும் பிடித்த இரையைக் கொட்டி உணர்விழக்கச் செய்யவும் பயன்படுகின்றன. நாங்கள் கொட்டினால் அதிர்ச்சி மட்டுமல்ல காயங்களும் உண்டாகும்'' என்றது பச்சடி மீன்.

''பின் இருக்காதா? பச்சடி மீனுனும் உங்களுக்கும் தற்காப்பு வேண்டுமே!'' என்றான் பட்டு.

மூளைக்கு வேலை


அருகில் உள்ள படத்தைப் போல—மூன்று முக்கோணங்களைச் சுற்றி ஒரு பெரிய முக்கோணம் வரும்படி வரைய வேண்டும். 'ப்பூ! இதென்ன பிரமாதம்!' என்பீர்கள். நிபந்தனைகளைக் கேட்ட பிறகு அப்படிச் சொல்லுங்கள். ஒரு முறை காகிதத்தில் வைத்த பென்சிலை எடுக்காமல் இழுத்த கோட்டின்மீது மறுபடி இழுக்காமல் இதை வரைய வேண்டும். முடியுமா உங்களால்?







★ இங்கே உள்ள கோலம் எப்படி இருக்கிறது நீங்கள் வீடு வரைவது போல் இருக்கிறதில்லையா? இதையும் அதேமாதிரி கையை எடுக்காமல் கோட்டின் மீது மறுமுறை ஓட்டாமல் ஓரே மூச்சில் உருவாக்க முடியுமா?

★ உங்கள் விரல்களும் பென்சிலும் இதற்குள் அனுபவப்பட்டிருக்கும். இதோ இங்குள்ள படத்தில் காணும் பதினாறு புள்ளிகளையும் ஆறு நேர் கோடுகளை மட்டுமே வரைந்து தொட்டு விட வேண்டும்; எங்கே பார்க்கலாம்! ஒருமுறை வைத்த பென்சிலை காகிதத்திலிருந்து எடுக்கக் கூடாது.






★ இங்குள்ள படத்தில் ஏழு வளையங்கள் இருக்கின்றன இல்லையா? ஒன்றிலிருந்து ஏழு வரையிலான எண்களை ஏழு வட்டங்களில் எப்படி அமைத்தால் - எந்த விதமாகக் கூட்டினாலும் பன்னிரண்டு வரும்? ஒரு வட்டத்துக்குள் ஒரு எண்தான். ஏழு எண்களையும் பயன்படுத்த வேண்டும்.



தெரியுமா ?



1631. **Kraal** க்ரால் என்பது என்ன?

1632. இன்காஸ் என்ற புராதன இனத்தவர் வாழ்ந்த பகுதிகளில் 1911ல் ஹிராம்பிங்ஹாம் என்பவர் ஒரு நகரத்தைக் கண்டுபிடித்தார். அதன் பெயர் தெரியுமா ?

1633. காலரா என்ற கொள்ளை நோய்க்கான கிருமியைக் கண்ட ஜெர்மானியரின் பெயர் என்ன?

1634. அமெரிக்க மாகாணங்களான யோமிங், மான்டானு, இடாஹோ ஆகியவைகளின் பகுதிகளுக்கு உட்பட்ட ஒரு தேசியப் பார்க் இருக்கிறது. இதன் பெயர் என்ன ?



பாஸ்டர் நாக்

திருத்தம் :

[சென்ற இதழ் கோகுலத்தில் 1608ம் எண்ணுள்ள வினாவான டாக்டர் ஷிவாகோ என்ற நூலின் ஆசிரியர் யார் என்ற கேள்விக்கு விடை தவறுதலாக அச்சாகியுள்ளது. ஷிவாகோவை எழுதியவர் போரிஸ் பாஸ்டர் நாக். சென்ற வாரத்துத் தவறான விடையில் குறிப்பிட்டுள்ள அலக்ஸாண்டர் கோல்ஷினிஸ்டினும் பிரபல எழுத்தாளர்தான். அவர் உருவாக்கிய நூல்—First circle.]

1635. ஒட்டைச் சிவிங்கிகள் உலகின் எந்தப்பகுதியில் காணப்படுகின்றன ?

1636. எந்த மதத்தில் அதன் அங்கத்தினராகும்போது அவர்களுக்கு ஒரு க்ஷவரக் கத்தி, மூன்று உடைகள், ஓர் ஊசி, நூல்கண்டு, தண்ணீர் வடிகட்டி, திருவோடு இவ்வளவும் வழங்குவார்கள் ?

1637. புகழ்பெற்ற கோஹினூர் வைரம் எங்கிருந்து வந்தது தெரியுமா?

1638. கிரேட் லேக்ஸ் — பெரிய ஏரிகள் எங்கு உள்ளன ?

1639. மத்திய ஆசியாவின் பனி மூடிய பகுதிகளில் வாழும் பனி வேங்கைக்கு வேறொரு பெயர் உண்டு. அது என்ன?

1640. ஹட்ஸன் நதி எங்கு உற்பத்தியாகிறது?

1641. உலகிலேயே மிக மிக உயரமான இடத்திலுள்ள நகரம் எது, எங்குள்ளது ?

1642. மேற்குப் பாரதத்தின் இரண்டாவது மிகப் பெரிய நகரம் எது ? எதற்குப் புகழ்பெற்றது ?

1643. ஜாம்பியாவின் தலைநகர் எது ?

1644. ஈக்விஞக்ஸ் (Equinox) என்றால் என்ன?

1645. இமய மலை அடிவாரத்தில் உள்ள இந்துக்களின் புகழ்பெற்ற புனிதத் தலத்தின் பெயர் தெரியுமா ?

1646. பாரத சுதந்திரப் போராட்டம் ஆரம்பமான ஆண்டு எது ?

1647. பிரம்ம சமாஜத்தை நிறுவியவர் யார் ?

தெரியுமே !

விடைகள் : 1631. ஆப்பிரிக்காவிலுள்ள ஸுலு இனத்தவரின் கிராமங்களுக்குப் பெயர். 1632. மச்சு பிச்சு (Machu P.cchu) என்று பெயர். 1633. ராபர்ட் கோச் (Robert koch) 1634. எல்லோ ஸ்டோன் பார்க். 1635. மத்திய, தென் ஆப்பிரிக்காவின் பாலைவனப் பகுதிகளில். 1636. புத்தமதத்தைத் தழுவி பிட்சுக்களாவோருக்கு. 1637. ஹைதராபாத்துக்கு அருகிலுள்ள கோல்கொண்டா என்ற இடத்திலிருந்து. 1638. கனடாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கு மிடையேயுள்ள ஐந்து சுத்த நீர் ஏரிகளுக்கு இப் பெயர். 1639. அவுன்ஸ் (Ounce) என்று பெயர். 1640. அடிரான்டாக் (Adirondack Mountain) மலையில். 1641. திபெத்திலுள்ள கார்டாக் (Gartok) நகரம். 1642. அகமதாபாத். நெசவாலைக்குப் பெயர் பெற்றது. ஜனத்தொகை 18 லட்சத்துக்கு மேல். 1643. லுஸாகா. 1644. பூமத்திய ரேகையில் சூரியனின் கிரணங்கள் செங்குத்தாக விழும்போது இரவும் பகலும் சமமாக—12 மணி நேரங்களாக—இருக்கும். இப்படி ஆண்டில் இரண்டே நாட்களுக்குத்தான் ஏற்படும். மார்ச் 21, செப்டம்பர் 13. இவைகளே ஈக்வினாக்ஸ் என்பார்கள். 1645. ஹரித்துவாரம். 1646. ஆங்கில ஆட்சியில்,1857-ம் ஆண்டில். 1647. ராஜாராம் மோகன் ராய்.

